Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
- Banguet Hall
- Conference Hall
- Restaurant
- Luxurious rooms
- Swimming Pool
- Gymnasium/Spa

70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 091

## நாளை முதல் 92 ஒக்டேயின் பெற்றோல்

(கொழும்பு)

நாளை முதலாம் திகதி தொடக்கம் நாட்டில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் 90 ஒக்டேயின் பெற்றோலுக்கு பதிலாக 92 ஒக்டேயின் பெற்றோல் விற்பனை செய்யப்படும் என கனிய வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அமைச்சுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் நட்டம் ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் அந்த சுமையை

(19) பக்கம் பார்க்க...

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்

## சட்டத்தில் திருத்தம் செய்யக் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கூடுதல் அதிகாரங்களை பெறுவதற்கான சட்டத்திருத்தம் ஒன்றைக் கோரியுள்ளது. அதற்கான பரிந்துரைகள் ஜனாதிபதி உள்ளிட்ட தொடர்புடைய அமைச்சு மட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

1996 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டம்தான் இன்னும் நடைமுறையில் இருக்கிறது. உலகில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக கனடா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசதுறை மட்டுமன்றி தனியார் துறையைச் சார்ந்தவர்களின் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரித்து தீர்த்துவைக்கமுடியும். இலங்கையில் அப்படியான நிலைமை இன்னும் இல்லை என்று பி:பி.சி. தமிழோசையிடம் மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹநாம ஹேவா தெரிவித்தார்.

இப்போதுள்ள சட்டத்தின் படி, நாங்கள் முன்வைக்கின்ற பரிந்துரை ஒன்று நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மிகவும் நீண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டியிருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமற் போகின்றன என்றும் கூறினார்

(19) பக்கம் பார்க்க...

## பளையில் பாரிய எரிபொருள் களஞ்சியம்

(கொழும்பு)

பளையில் பாரிய எரிபொருள் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வடபகுதிக்கான எரிபொருள் விநியோகத்தை இலகுபடுத்தும் முகமாகவே இந்த எரிபொருள் களஞ்சியம் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்களஞ்சியம் அமைக்கப்பட்டவுடன் வடக்கிற்கான எரிபொருள் விநியோகத்தினை கணிசமாகக் குறைக்க முடியும் என்றும், சீரான விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது.

முன்னுரிமை!



06

# வடக்கில் காணாமற்போனோர்; அடுத்த வாரம் விசாரணை

(கொழும்பு)

யுத்த காலத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் வடக்கில் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கான கால எல்லை இன்றுடன் நிறைவடைகிறது.

இதனைத் தொடர்ந்து ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் இந்த விசாரணைகளின் முதற்கட்ட நடவடிக்கைகள் வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, மேற்படி விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க் ஆணைக் குழுவின் சிபார்சுக்கு அமைவாகவே மேற்படி ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

முதற்கட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்யவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணசேன கூறியுள்ளார்.

இந்த விசாரணைகளுக்காக சட்ட மாஅதிபர் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்றின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளதாக காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவிற்கு இதுரை 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆதங்கம்



08

# இந்திய மீனவர் அத்துமீறல்; நேற்றும் 18 பேர் கைது

யாழ். நெடுந்தீவுக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் 18 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம், பாம்பன் பகுதியிலிருந்து 3 நாட்டுப் படகுகளுடன் வந்த இந்திய மீனவர்கள் 18 பேரையே கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள். யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பாலசுப்பிரமணியம் ரமேஷ்கண்ணா தெரிவித்தார்.

இந்த நிலையில், மேற்படி மீனவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இரவும் 6 படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் 22 பேர் நெடுந்தீவில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேருக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

## கனேடிய தமிழ் எம்.பி. யாழ்ப்பாணத்தில்



(யாழ்ப்பாணம்)

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரை அவர் வடகக்கில் தங்கி நின்று யுத்த பாதிப்பிற்குள்ளான பகுதிகளை நேரில் பார்வையிடத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு வந்த அவர், வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயம் உள்ளிட்ட பல பகுதிகள் குறிப்பாக,வலி. வடக்கு பிரதேசம் மற்றும் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார். இவர் இன்று

(19) பக்கம் பார்க்க...

# பொலிஸார் தவறு செய்தால் முறைப்பாடு செய்ய வாய்ப்பு

### அவசர தொலைபேசி இலக்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தவறு செய்யும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு பொதுமக்களுக்கு இலகுவான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக பொலிஸாருக்கு எதிராக பொது மக்கள் முறையிடுவதற்கு புதிய அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் டி.எம்.கே.பீ தென்னக்கோன் தெரிவித்தார்.

பொலிஸார் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் தவறுகள் தொடர்பில் 0710361010 என்ற அவசர அழைப்பு இலக்கத்தின் மூலம் முறையிடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீனவர்களுக்கு கட்டாயக் காப்புறுதி நாளை முதல் நடைமுறை

காப்புறுதி மற்றும் உயிர்ப்பாதுகாப்பு அங்கியின்றி மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது எனும் நடைமுறை நாளை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

ஒலுவில் மீன்பிடித் துறை முகத்திலும் புதிய சட்டம் குறித்த அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

இந்த நடைமுறையை கடுமையாக அமுல்படுத்தும்படி மாவட்ட கடற்றொழில் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னரே இது குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்டு, மீனவர்கள் அமைப்புடன் கலந்துரையாடல்களும் நடைபெற்றுள்ளதாக மீன்பிடித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காப்புறுதி செய்யப்படாத படகுகளுக்கு 2014 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனும் அறிவித்தல் மீனவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

அரசின் இந்த முன்னெடுப்பு வரவேற்கத்தக்கது என்கிறார் தேசிய மீனவர் சம்மேளனத்தின் உறுப்பினரான ஏ.சி.எம். முனாவர். சீரற்ற காலநிலை மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்தக் காப்புறுதி உதவிகரமாக இருக்கும் எனவும் அவர் கூறுகிறார்.

உயிர்ப்பாதுகாப்பு அங்கியை அனைத்து மீனவர்களுக்கும், படகுகளின் உரிமையாளர்கள் வழங்க முடியாத சூழலும் சில இடங்களில் இருப்பதால், ஒரு படகுக்கு ஒரு அங்கியாவது வழங்கவும், காப்புறுதித் தொகையில் ஒரு பகுதியை செலுத்தவும் அரசு முன்வர வேண்டும் என தமது சங்கம் அரசிடம் கோரியுள்ளது எனவும்

(19) பக்கம் பார்க்க...

# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினை; மன்னாரில் அவசர கலந்துரையாடல்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக விவசாயச் செயகையினை மேற்கொண்டு வரும் விவசாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடலொன்று நேற்றுக் காலை 10.30 மணியளவில் மன்னார் உயிலங்குளம் ம.வி பாடசாலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாந்தை மேற்கு, மடு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெரும்போக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட விவசாயிகள் தெரிவிக்கையில், தற்போது மன்னார் மாவட்டத்தில் மழை பெய்யாததன் காரணத்தினால் பெரும்போக விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு நீர் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கட்டுக்கரைக் குளத்தை நம்பி தற்போது 4 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் இரண்டு மாதங்களை கடந்த பயிராக அப்பயிர்கள் காணப்படுகின்றன.

தற்போது நெற்பயிருக்கு உரிய நீர் இல்லாமையினால் ஆயிரம் ஏக்கர் வரை நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளது. தற்போது எஞ்சியுள்ள பயிர்களை யாவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

கட்டுக்கரைக் குளம் இதுவரை திறந்து விடாததன் காரணத்தினாலேயே இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக மேற்படி விவசாயிகள் சுட்டிக்காட்டினர். எதிர்வரும் மாதம் நெற்கதிர் வருகின்ற காலம் என்பதினால் உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது மட்டுமின்றி அப்பகுதிகளில் கால்நடைகளினால் விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே விவசாய பயிர்ச் செய்கையை பாதிப்படையச் செய்கின்ற வகையிலும், பயிர்களை உண்ணும் வகையிலும் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே இவ்விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் மேலும் கோரினர்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய அரசாங்க அதிபர், விவசாயிகள் எதிர்நோக்குகின்ற இப்பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமின்றி எதிர்வரும் 5 ஆம் திகதி கட்டுக்கரைக் குளம் திறந்து விடப்பட்டு விவசாயச் செய்கைகளுக்கு நீர் சென்றடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

திறந்து விடப்படுகின்ற நீர் தேவையற்ற விதத்தில் பயன்படுத்திக்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல், உதவி மாவட்ட செயலாளர் எம்.பரமதாஸ், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தேவரதன், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.மயூரன், நீர்ப்பாசனத் திணைக்கள திட்ட முகாமையாளர் கிருஷ்ணரூபன் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வருடாந்த ஒன்றுகூடல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று நண்பகல் நகராட்சி மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (11)


## தேவை

கார்த்திகை பூ காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய காய்களை வாங்குகின்றோம்.

தொடர்பு: E.K & Co 55/1
ஸ்ரீ மகிந்ததர்ம மாவத்தை
கொழும்பு - 9
தொ.பே. 0112 677077, 0112 2697729.

(C/3259)


## சஞ்சிகை வெளியீடு

(வடமராட்சி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் இவ்வாண்டு நல்லொழுக்கம் என்ற சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளது.

இதில் 'திருவள்ளுவரின் ஒழுக்கம்' என்ற அதிகாரம் பிரசுரிக்கப்படும். தொடர்ந்து கல்வியாளர்களின் கட்டுரைகளும் மாணவர்களின் கட்டுரைகளும் இடம்பெறும்.

மேலும் இச்சஞ்சிகை நிறுவனத்தின் ஓர் ஆவணமாக பேணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## 29 ஆவது பொதுப் பட்டமளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா 10.01.2014, 11.01.2014 ஆகிய இரு தினங்களும் நடைபெறவிருப்பதால் இதுவரையிலும் பட்டமளிப்பு விழாவிற்கு விண்ணப்பிக்காத கலைப்பீட மாணவர்கள் 03.01.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அதற்குரிய விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து **உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

**பதிவாளர்.** (C/3261)


# தாவரவியல் பூங்கா கிளிநொச்சியில் அமைப்பு

(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் தாவரவியல் பூங்காக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

30 வருட கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்கள் அமைதியாக அச்சமின்றி வாழ்கின்றனர். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சென்று வரக் கூடிய நிலைமையும் உருவாகியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்களும் சுற்றுலாப் பயணிகளும் இயற்கைப் பூங்காக்களின் அழகை ரசித்து பொழுதை மகிழ்ச்சிகரமாக கழிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தாவரவியல் பூங்காக்கள் நிறுவப்படவுள்ளன. இதன் முதற்படியாக வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் தாவரவியல் பூங்காவொன்று நிறுவப்படவுள்ளது.

கிளிநொச்சிப் பிரதேசம் 30 வருட கால யுத்தத்தின் பின்னர் மக்களைக் கவர்ந்த இடமாக மாறி வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# கைதடியில் விபத்து; இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

கைதடி பாலத்திற்கு அருகில் நேற்றுக்காலை 7. 35 மணியளவில் இடம்பெற்ற டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கைதடியிலிருந்து சாவகச்சேரியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கைதடி கிழக்கு கைதடியை சேர்ந்த தீ.தனுறாஜ் (வயது - 23) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த டிப்பர் வாகனம் மற்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட போதே விபத்து நிகழ்ந்தது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வற்றியது வவுனிக்குளம்; நெற்செய்கையாளர் அவதி

(வவுனிக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரிய குளமான வவுனிக்குளத்தின் நீர்மட்டம் நேற்றைய நிலைவரப்படி 11 அடி 10 இஞ்சியாக இருந்ததாக வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர் விகர்ணன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மழை பொய்த்துப்போன நிலையில் வவுனிக்குளத்தின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் குளம் மூன்றடி வான்பாய்ந்தது.

வவுனிக்குளத்தை நம்பி 6060 ஏக்கர் வயல்கள் உள்ளன. நெல் விதைப்பிற்கு முன்னர் விவசாயிகளிடம் பெருமளவிற்கு புழுதி விதைப்பையே மேற்கொள்ளுமாறு தெரிவித்திருந்தோம். இருந்தும் தண்ணீர் தட்டுப்பாடான நிலையில் பெருமளவான விவசாயிகள் பலகை அடிப்புச் செயது விதைத்துள்ளதனால் தண்ணீரும் பெருமளவு விரயமாகியதுடன், புழுதி விதைப்பை மேற்கொண்டவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம். மழை பெய்யாது விடின் குளத்தில் ஐந்தடி தண்ணீர் நிற்கும் வகையில் நீர் விநியோகம் நிறுத்தப்படும். எனினும் அடுத்து வரும் ஓரிரு தினங்களில் மழை பெய்யலாமென்ற நம்பிக்கை உள்ளது.

இதேவேளை புழுதி விதைப்பிற்கு மாறாக பலகை அடித்து விதைப்பை மேற்கொண்டவர்களுக்கு எதிராக எதிர்வரும் சிறுபோகத்தின்போது மாவட்ட அரச அதிபரின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

வவுனிக்குளத்தை விட ஏனைய சிறு குளங்கள் முற்றாக நீர் வற்றி வறண்டு காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (140)

### பொது ஊழியர் சங்கம் முன்வைத்த

# பத்து அம்சக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்ட மாதாந்த நிர்வாகக் கூட்டம் கொட்டடியில் அமைந்துள்ள மாவட்ட அகில இலங்கை பொது ஊழியர் சங்க அலுவலகத்தில் மாவட்ட இணைப்பாளர் மு.மகேஸவரன் தலைமையில் நேற்று முன்தினம் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்றது.

இவ்விழாவில் வடமாகாண அரச பொதுச்சேவை ஆணைக்குழு முன்னிலையில் சங்கத்தினால் 10 அம்சக் கோரிக்கையை முன்வைத்து கடந்த 23.04.2013 அன்று அரச சேவை ஊழியர்களின் நிலைவரங்களை எடுத்து இயம்பியும் அதன் நடவடிக்கைகளை உடன் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து செயற்படுத்துவதாகவும் இவ் பொதுச்சேவை ஆணைக்குழுவில் கலந்து கொண்ட உயர் அதிகாரிகளினால் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் சங்கம் மிகுந்த வேதனையடைந்துள்ளது.

எதிர்காலத்திலாவது அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தினால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட 10 அம்சக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என சங்கம் எதிர்பார்க்கிறது.

எனவே வடமாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து திணைக்களங்களும் 23.04.2013 ஆம் ஆண்டு பொதுச்சேவை ஆணைக்குழுவினருடன் சங்கம் கலந்து கொண்டு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட 10 அம்சக் கோரிக்கையை பொதுச்சேவை ஆணைக்குழு நிறைவேற்ற வேண்டுமென ஊழியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஏனெனில் இன்றுவரையும் ஊழியர்களின் வேண்டுகோள்கள் நிறைவேறாது இழுத்தடிப்புச் செய்து வருவதோடு பதவிகளும் பறிக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் சங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என சங்கத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (140)

# வறிய முதியோர்களுக்கு இலவச கண்வில்லைகள்

## 2014 முதல் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

வறிய முதியோர்களுக்கான இலவச கண்வில்லைகளை 2014 ஆம் ஆண்டு முதல் மாவட்டச் செயலகங்களில் உள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகங்களின் ஒத்துழைப்பைப் பெற்று பிரதேச செயலர்கள் ஊடாக வழங்க உள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் அனுசா கோகுல பெர்னான்டோ அறிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

அறுபது வயதை அடைந்த வறிய முதியோர்களுக்கான இலவச கண்வில்லைகள் வழங்கும் செயற்பாடு இதுவரை காலமும் கொழும்பிலுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகம் ஊடாக மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

இதனால் இலங்கையின் அனைத்து மாகாண முதியோர்களும் கொழும்புக்கு சென்று கண்வில்லைகளைப் பெறுவதற்கு நீண்ட நாட்கள் காத்திருக்கு வேண்டிய நிலை ஏற்பட்டது. இம் முறைமையில் 2000 முதியோருக்கு மட்டுமே இலவச கண்வில்லைகளை வழங்க முடிந்தது.

இப் புதிய முறைமையின் மூலம் பல்லாயிரக்கணக்கான 3000 ரூபாவிற்கு குறைந்த வருமானம் பெறும் வறிய முதியோர் தமது சொநத பிரதேசத்திலேயே கண்வில்லைகளைப் பெறமுடியும்.

இலவச கண் வில்லைகளைப் பெற விரும்பும் முதியோர் ஒருவர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சென்று உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்துதல் வேண்டும்.

கண் வைத்தியரிடம் சென்று கண்வில்லையின் அளவு குறித்த வைத்திய சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

விண்ணப்பத்தையும் வைத்திய சான்றிதழையும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் ஒப்படைத்தல் வேண்டும். என அவர்மேலும் தெரிவித்தார். (90)

## வேலையற்றிருக்கும் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் பெண்களுக்கான பயிற்சி வகுப்பு உயரப்புலம் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலரின் ஒழுங்குபடுத்தலில் மேற்கொள்ளப்படும் இப்பயிற்சிநெறி மூலம் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளம்பெண்கள் வருமானத்தை தேடும் வகையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்களுக்கான பயிறசி நெறியை வருடாவருடம் கிராமங்களில் நடததி வருகின்றது. அந்தவகையில் 2014 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறியை உயரப்புலம் கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடத்த பிரதேச செயலர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வதிரி அபிவிருத்தி நிறுவனத்தினால் அமரர் அதிபர் சீனித்தம்பி புலமைபரிசில் நிதியத்தினால் கொழும்பில் வசிக்கும் அவரது மகன் .சீ.ராஜநாதனின் நிதியுதவியுடன் வதிரி கிராமத்தில் கல்வியில் உயர்நிலையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கான 2014 கல்வியாண்டிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வதிரி பாக்யலஷ்மி பவனத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிதியத்தின் தலைவர் சீ.சாந்தநாதன், பொருளாளர் சீ.சித்தரஞ்சன் , விருந்தினராக அமரரின் உறவினரான சிவதேவி வரதராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களிற்கு தேவையான கற்றல் உபகரணங்களும், கல்வி அபிவிருத்தி நிதியும் வழங்கப்பட்டது.


இச் செயற்பாடானது கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (90)

## வள்ளக்குளப் பிள்ளையாரில் பொங்கல் விழா

மறவன்புலவு வயல்களில் ,கடும் வெயிலிலும் நிறை மழையிலும் ஓயாது உழைத்த உழவர்களின் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இறைவனின் அருள்,சூரியனின் ஒளி மேகங்களின் மழை இவை தமக்கான கொடை என்பதை நினைவுபடுத்தியும், நன்றி தெரிவித்தும் சாவகச்சேரி மறவன்புலவு அருள்மிகு வள்ளக்குளப்பிள்ளையார் கோவிலில் வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

மறவன்புலவு விவசாயிகள் அனைவரும் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு பானை வைத்து கோவிலில் பொங்கி பொங்கல் விழாவை சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



பளை பஸ்தரிப்பிடத்திற்கு மேலே அமைக்கப்பட்டுவரும் கடைத்தொகுதி. (130)




# புள்ளடியைப் போட்டம்... போக்கறுந்து போனீரே..!

'எங்க ஐயா போனீர்.... எங்கள்
குலத்து ராசா...?
மாணிக்கமே... கடல் விளக்கே...
மாயமாய் மறைந்தனையோ...!
குலம் விளங்க வந்த தெய்வமே...
உம்மையல்லோ தேடுகிறோம்....
விழிவெள்ளியாக நீர் வந்து... விளக்கேற்றக் காத்திருந்தோம்!
காணாமற் போனீரே... எங்கள் கடற்றொழில் அமைச்சரே...!
இந்திய மீனவர்வந்து... எங்கள் எல்லையில் குவியிறாரய்யா....
அடாத்துப் பண்ணி ஐயா... அள்ளிப்போகிறார் எங்கள்
மீனையெல்லாம்....
இதற்கொரு முடிவைத் தாரும் என்றெல்லோ கேட்டோமய்யா....
எங்கே ஐயா போனீர்... எங்கள் கடற்றொழில் அமைச்சரே....!
கடலான கடலம்மா... எங்கள் கடல் மந்திரியைக் கண்டியாம்மா...!
கடலோடும் வாழ்வெல்லாம் பெருமேடு காணுமென்றீர்....
சொன்னவரைக் காணவில்லை... செத்தவார்த்தை
காயுதம்மா....
போடு புள்ளடி டெனிஸ்ரன் ஐயாவுக்கு.... போய்விடும் எங்கள்
இருளெல்லாம் என்றாரம்மா...
போட்டாலும் போட்டம் போக்கறுந்து போனீரே..!
வீட்டில் அடுப்பெரிய நல்லதொரு வழிதருவீர்,
என்றெல்லோ வாக்களித்தோம்... என்றெல்லோ
காத்திருந்தோம்....
எங்கள் வயிற்றில் நெருப்பெரியவிட்டு... எங்கே நீர் சென்றீரோ....
சூடைவலை விரித்துள்ளோம் உமக்கு.... சொல்லுமய்யா எங்கே
உள்ளீர்?
பாரைவலை விரித்துள்ளோம்.... உமக்கு.... படுபாவி
சிக்கிறீரில்லையே...
வாடைக் குளிருக்குள் நின்று வாய்புலம்புகிறேன் கேளுமய்யா....
நாரை, நாகாய் எல்லாம் என்குரலைக் கேட்குதய்யா...
ஏனென்று கேட்பதற்கும் இருக்கிறேன் என்று சொல்வதற்கும்
வாய்திறக்க மாட்டீரோ... எங்கள் வலியறியாத் துரையே...!
சுறாப்போலே... நீர்... சிக்காமல் சுழித்தோடும் மர்மமென்ன?
விரால் வழுக்கியதைப்போல நீர் விலகியோடும் காரணமென்ன?
பெண்டு பிள்ளைகள் நாங்கள் பிறத்தியாராய்ப் போனோமோ...!
நண்டு சினைமுற்றி பொந்தை விட்டுப்போனதுவோ....
எங்கள் விதியழிக்க... வந்தவரை விட்டுவைத்துக்
காப்பதென்ன...?
கள்ளச் சூதிது ஐயா... கனகாலம் போகாது...
இந்தியாவில் உங்களுக்கு இனிப்போடு விருந்தென்றார்...
இங்கோ எங்களுக்கு சோற்றிலே மண்ணல்லோ....
மன்னாரிலும் மாதகலிலும் நாங்கள் கிடந்து வயிறுகாயிறோம்...
முல்லையிலும் பொலிகண்டியிலும் கரைநீளம் புலம்புகிறோம்....
சக்கோட்டைக் கரையிலே சாவீடு நடக்குதய்யா...
இதையெல்லாம் காணாமல் எங்களுக்கு வேற கதை பேசுறியள்....
தெற்கே இருந்து யமசேனை வருகுதென்று... பொல்லாத க்தை
பேசிறியள்....
போதுமய்யா போதும் பொல்லாத கதைபோதும்...
பொய்யும் புனைவுமாகிப் போனீரோ நீருமய்யா....
ஆண்டுபலவாய் நீண்ட துயர் ஏதும் போகவில்லை.....
நம்பியிருந்தோம் கலங்கரையே...! நடுக்கடலில் தவிக்க
விட்டீரே....!
இந்திய மீனவரை எங்கள் கடற்படையெல்லோ தடுக்குது.....
அந்தப் படையும் இல்லையெண்டால்.... எங்கள் பாடு
அந்தரந்தான்....
ஐயா மந்திரியாரே... அறிவீரோ.... எங்கள் கண்ணீரையும் அதன்
காரணத்தையும்...
இந்திய மீனவருக்கு ஒரு முடிவைக் காணுமய்யா...
எங்கள் வயிற்றினிலே எரியுதய்யா ஒரு நெருப்பு...
பொல்லாத நெருப்பய்யா....
அது நீர் போகும் வழியைச் சுட்டெரிக்கும்...

உழைப்பு வறுமையை மட்டும் விரட்டுவதில்லை. தீமையையும் சேர்த்து விரட்டுகிறது. - ரூசோ.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எப்போதுதான் நாம் மாறுவோம்?

2013 விடைபெற்றுச் செல்கிறது.

பழையன கழிய புதியன புகுவது கர்லவகையினது தான் என்றார்கள். நாங்கள் பழையனவற்றிலிருந்து விடுபட்டு புதிய வழிவகைகளைக் காண முயல்கிறோமா என்று நம்மைக் கேட்டுப்பார்க்க வேண்டும்.

எங்கள் சிந்தனையில் ஏதாவது புதிய மாற்றம் வந்திருக்கிறதா? எங்களை நாம் மாற்றிக்கொள்ளக் கொஞ்சமாவது முயற்சித்திருக்கிறோமா?

ஃபீற்லா என்ற அறிஞர் சொன்னார், “எங்கள் முக்கியமான பிரச்சினை மக்களிடமிருந்தே மக்களை எப்படிக் காப்பது என்பதுதான்”. அதற்குக் காரணம் மக்கள் தாம் விரும்புவதைக் கனவு கண்டு கொண்டிருப்பார்களே தவிர, யதார்த்தத்தில் நமக்கு எது கிடைக்கப்போகிறது என்பதைச் சிந்திக்க மாட்டார்கள்; அந்த எண்ணம் அவர்களுக்கு உவப்பானதல்ல.

தலைவர்கள்தான் நடைமுறைச் சாத்தியமானதை அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள். அவர்கள் நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சொல்வது, மக்கள் விரும்பியதற்கு மாறான கசப்புத் தன்மையைக் கொண்டிருந்தாலும், அதுதான் மருந்து, அதுதான் மக்களது ஆரோக்கியத்திற்குத் தேவையானது என்பதை தலைவர்கள் எனப்படுவோர் தான் மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

போர் சமயத்தில் தத்தம் தரப்புக்கே வெற்றி கிடைத்துவிட வேண்டும் என்பதுதான் எல்லா மக்களினதும் விருப்பமாக இருக்கும். மக்கள் அழிவைத் தடுக்கக் கூடிய உச்சபட்சமான சமரசப் புள்ளியைத் தக்கசமயத்தில் தேர்ந்திருக்க வேண்டியது தலைவர்கள், புத்திஜீவிகளினது கடப்பாடாகும். செய்தார்களா?

மக்களுக்கு யதார்த்தத்தை உணர்த்துவதும், அவர்களுக்கு உவப்பாக இல்லாதது ஆனாலும் நடைமுறைக்குச் சாத்தியமானதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டியதும் மேற்குறித்தோரது கடமைகளில் தலையாயது.

இப்போதும், தனி நாடு அமைய வேண்டும், சந்திரிகா தர இருந்ததையும் விட கூடுதலான அதிகாரங்கள் வேண்டும் என்பதெல்லாம் நம்மில் சிலரது விருப்பமாக இருக்கலாம். ஆனால் விஷயமறிந்த தலைவர்கள் புத்திஜீவிகள் என்போர் அவற்றை மாயமான் காட்டுவது போலக் காட்டி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது.

அவ்வாறு நடக்காததைக் காட்டி ஏமாற்றும் போலி அரசியலையே நாம் சுயலாப அரசியல் என்கிறோம். அரசாங்கத்திடம் பேசி எந்தத் தீர்வும் எடுக்க முடியாது என்று சொல்பவர்கள், சர்வதேசத்திடம் பேசி இதுவரை எந்தத் தீர்வுக்கான இணக்கத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அல்லது, எந்த மாதிரியான ஒரு தீர்வை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும் என்று இவர்கள் கருதிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையாவது மக்களுக்குச் சொல்ல வேண்டும். அரசாங்கத்துடன் பேசியும் சரிவராது தெரிவுக்குழுவும் சரிவராது என்றால் இத்தறுதிக்கு சர்வதேசத்தைக் கொண்டு செய்யப் போவதையாவது பகிரங்கப்படுத்தியிருக்க வேண்டும்.

அப்படி எதையும் செய்யாது மக்களையும் மாணவர்களையும் உசுப்பேத்தி விட்டுக் கொண்டிருப்பதானது, பழையபடி ஆயுதப் போராட்டம் தான் வழி என்று இளைஞர்களைத் தூண்டி விட்டுப் பதுங்கிவிடும் பழைய வஞ்சக வரலாற்றை மறுபடியும் தொடங்குவதாகவே அர்த்தப்படும்.

நாளை மற்றொரு புதுவருடம். கடந்து போன காலத்தை இப்போது திருத்திக் கொள்ள இயலாது. வரப்போகும் நாட்களை என்ன செய்யப் போகிறோம்? நம்மைத் திருத்திக் கொள்வோமா என்பதே, வரும் ஆண்டின் தொடக்கத்திலும் எம்முன்னால் நிற்கின்ற கேள்வி.

- ஆசிரியர்.

# சிறுபான்மை சமூகத்தினரை உதாசீனம் செய்கிறது ஐ.தே.க.

### கட்சியின் தென்மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப் பதவியை ஏற்றது முதல் சிறுபான்மை சமூக உறுப்பினர்கள் உதாசீனம் செய்யப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மாகாண சபை உறுப்பினர் மைதிரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கமும் சிறுபான்மை சமூகத்தை விட்டு விலகியுள்ளது. தேர்தல் காலங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார். இதனால் நீண்ட காலமாக கட்சிக்காக பாடுபட்ட சிறுபான்மை சமூக கட்சி உறுப்பினர்கள் உதாசீனம் செய்யப்பட்டு வருகிறார்.

கடந்த காலங்களில் சகல இன சமூகத்தினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்து வந்தனர்.

எனினும், ரணில் விக்ரமசிங்க கட்சித் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டது முதல் சிறுபான்மை சமூக உறுப்பினர்கள் உதாசீனம் செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு, மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்த முனைப்பு காட்ட வேண்டாமென வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஓர் இனவாத கட்சியல்ல என தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்சி மீது நம்பிக்கை ஏற்படக் கூடிய வகையில் செயற்பட . வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

# விருப்புவாக்கு எண்ணும் நிலையத்திற்குள் வேட்பாளரை அனுமதிக்க ஆலோசனை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் விருப்பு வாக்கு எண்ணும் மத்திய நிலையத்திற்குள் வேட்பாளர்களை அனுமதிப்பது குறித்து தேர்தல்கள் செயலகம் கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் இந்த முறை கடைப்பிடிக்கப்படும். கட்சியின் வாக்கு எண்ணி முடிக்கப்பட்ட பின் விருப்பு வாக்கு எண்ணும் தருணத்தில் வேட்பாளரை உள் அனுமதிக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது. தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் இவ்வாய்ப்பு வழங்கப்படமாட்டாதெனவும் வெற்றிபெறும் கட்சியின் வேட்பாளர்களுக்கு மாத்திரமே வாய்ப்பு வழங்கப்படும்.

இதன் அடிப்படையில் அடுத்த தேர்தலில் வாக்கு எண்ணும் மத்திய நிலையத்தின் தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னர் ஐந்து பேர் கொண்ட குழுவிற்கு மாத்திரமே விருப்பு வாக்கு எண்ணும் மத்திய நிலையத்திற்குச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிக[illegible] எதிர்வரும் வெள்ளிக்கிழ[illegible] 3ஆம் திகதி சந்திக்க தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான இந்த சந்திப்பு சாதாரண சந்திப்பாகவே அமையும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

# உகண்டாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையரை அழைத்துவர ஏற்பாடு

உகண்டாவில் தஞ்சமடைந்த இலங்கையர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்சூடானில் இடம்பெற்றுவரும் மோதல்களால் உகண்டாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு தகவல் வழங்கியுள்ளதாக உகண்டாவுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்துள்ளதாக தூதரக அதிகாரி காமினி பாலசூரிய தெரிவித்தார். தென் சூடானில் வலுப்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இதுவரை 13 இலங் கையர்கள் உகண்டாவை சென்றடைந்துள்ளனர்.குறித்த இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான விமான பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

விமான பயணச் சீட்டுக்களை பெற்றுத் தருவதாக தமது நிறுவனங்கள் ஏற்கனவே உறுதியளித்த போதிலும் தற்போது அவர்கள் அதனை மறுத்துள்ளதாக உகண்டாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், அரசாங்கம் தலையீடு செய்து தமக்குரிய விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன் தெனியவிடம் வினவியபோது, தற்போது உகண்டாவில் உள்ள 13 இலங்கையர்களையும் அழைத்து வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இவர்களில் 6 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாமலேயே தென் சூடானுக்கு [illegible]றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இவர்கள் அனைவரையும் இலங்கைக்கு அழைத்துவருவது தொடர்பில் உகண்டாவுக்கான இலங்கை தூதரகத்தின் அதிகாரிகளுடன் ஆலோசித்து வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புகலிடம் கோரவேண்டிய அவசியம் இலங்கையர்களுக்கு இல்லை

### ஆஸிக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

இலங்கையர்கள் புகலிடம் கோர வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது என அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசரசமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு நல்லிணக்கத்தை நோக்கி நகர்ந்து செல்வதாகவும் இதனால் இலங்கையர்கள் வேறும் நாடுகளில் புகலிடம் கோர வேண்டிய அவசியம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிவில் யுத்தம் முற்று முழுதாக நிறைவடைந்துள்ளது.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் சில தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றார். இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. புகலிடக் கோரிக்கையாளராகவோ அல்லது அகதிகயாகவோ அவுஸ்ரேலியாவிற்குள் இலங்கையர்கள் பிரவேசிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நோக்கங்களின் அடிப்படையில் இலங்கையர்கள் அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவிற்கும் இடையில் சிறந்த உறவுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார், குறிப்பாக கல்வி தொடர்பிலான உறவுகள் சிறந்த முறையில் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசியத்தின் சர்வதேசம் மீதான தடுமாற்றங்கள்

சாலையூரான்

புலிகளை முடிவுக்கு கொண்டுவருவதில் இலங்கைக்கு ஒத்துழைத்த நாடுகளை அதே இலங்கை அரசுக்கெதிராக திருப்பி விடுதலை வாங்கித்தரப் போவதாக எமது மக்களுக்கு போக்குக் காட்டும் ஒரு அரசியல் வழிமுறை இப்போது முனைப்பு பெற்றிருக்கிறது.

ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிலைப்படுத்தி, அரசுடன் இணக்கப்பேச்சுக்களுக்கான அழைப்புக்கு மசியாமல் இருப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு சர்வதேசத்திடம் தீர்வு வாங்கிக் கொடுத்துவிடலாம் என்கிற பாணியில் தமது முனைப்புக்களை தமிழ் கூட்டமைப்பினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இனப்பிரச்சினையை தீர்க்கப்போவதாக சர்வதேசத்தை வைத்து படம் காட்டும் இந்த அரசியல் வழிமுறைக்குள் அமெரிக்காவும் இந்தியாவும் பிரதான பாத்திரங்களாக இருக்கின்றன.

அமெரிக்கா வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே கடற்புலிகளின் ஆயுதக்கடத்தல்கள் குறிப்பாக இறுதிப்போரை அண்டிய காலகட்டத்தில் முறியடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே புலிகளுக்கெதிரான போரில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்பென்பதும் வெளிப்படையானது.

இந்த இரு நாடுகளும் இறுதி யுத்தம் வரை புலிகளை ஓரங்கட்டுவதில் கொண்டிருந்த விடாப்பிடியான போக்கு என்பது எமது தமிழ் தலைவர்களுக்கு புரியாத ஒரு விவகாரமல்ல.

புலம்பெயர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் ஜேர்மனியின் பிறீமர் நகரில் ஒன்று கூடிய மக்கள் தீர்ப்பாயத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றவைக்கு உடந்தையாக இருந்தாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

பிந்தியதாக மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கையில் இடம்பெற்ற மனிதப் பேரவலங்களுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டுமென தமிழரசு கட்சி பிரதிநிதி ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கூடவே, அமெரிக்காவை சார்ந்திருக்கும் 32க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒன்றாவது யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகளாகியும் தாம் ஏற்கனவே விதித்துள்ள புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு இன்னும் துணியவில்லை. அந்த அளவுக்கு புலிகளது போரின் வடுக்கள் இந்த நாடுகளிடம் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், இலங்கை அரசுக்கெதிராக இந்த நாடுகளெல்லாம் ஒன்றுதிரண்டிருப்பதாக, தமிழ் கூட்டமைப்பினர் முன்னெடுக்கும் பரப்புரைகளை தமிழ் மக்கள் எதன் அடிப்படையில் நம்ப முடியுமென்பது புரியாத புதிராகவே இருக்கிறது..

இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் சீனாவின் தலையீட்டை மட்டுப்படுத்துவதற்கான ஒரு வழியாக இலங்கையுடன் சீனாவுக்கிருக்கும் நெருக்கத்தை மட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சிப்பது எல்லோரும் அறிந்த விடயம்.

இதற்காக இலங்கை மீது மேற்கொள்ளும் அழுத்தங்களை தமிழ் மக்களுக்கு விடுதலை வாங்கித்தருவதற்கான அமெரிக்காவின் ஒரு முயற்சியாக காண்பிக்க முனைவது தமிழ் மக்களை அடிமுட்டாள்களாக்கும் முயற்சியாகும்.

கடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து இலங்கைக்கு எதிராக வாக்களித்திருப்பதால் அதற்குப் பதிலடியாக இறுதிப் போரில் இந்தியாவின் பாத்திரத்தை அம்பலப்படுத்த இலங்கை ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

ஜெனிவாவில் இம்முறை இது நடைபெறுமாயின், இந்தியாவிடம் தீர்வை பெற்றுத்தரப்போவதாக கூறி தமிழ் கூட்டமைப்பினர் செய்யும் அரசியலும் புஷ்வாணமாகிவிடும்.

உள்நாட்டில் சக இன மக்களுடன் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறதெனில் அதற்கு தீர்வும் நிச்சயம் உள்நாட்டிலேதான் இருக்க முடியும். அதனை சக இனங்கள் மத்தியில் தேடுவதே நேர்மையான அரசியல் வழிமுறையாகும்.

யுத்தத்தை வழிநடத்திய நாடுகளை மக்களின் மீட்பர்களாக கூறிக்கொண்டு அதே மக்களை தாம் கேடயங்களாக பாவிப்பதை சகித்துக்கொள்ள புலிகள் இறுதிவரை நிர்ப்பந்தித்தார்கள்.

இதற்கு ஈடானதாகவே இனப் பிரச்சினை தீர்வுக்கு சர்வதேசத்தை காட்டி தமிழ் கூட்டமைப்பினர் முன்னெடுக்கும் அரசியலும் வெளிப்பட்டு நிற்கிறது.

# இந்தியாவின் அடுத்த ஆட்சி யாரிடம்?

சங்கர சிவன்

இந்தியாவின் ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் மிஸோராமைத் தவிர மற்றைய நான்கு மாநிலங்களிலும் பாரதிய ஜனதாகட்சிக்குக் கிடைத்த வெற்றி அடுத்த அரசாங்கத்தை அக்கட்சியே அமைக்கும் என்ற எதிர்வு கூறலுக்கு இட்டுச்செல்கின்றது. மிஸோராம் மாநிலத்தில் காங்கிரஸ் அடைந்த வெற்றி மக்களவைக்கான (லோக்சபா) தேர்தலைப் பொறுத்த வரையில் கவனத்தில் கொள்ளக் கூடியதல்ல. அந்த மாநிலம் ஒரேயொரு மக்களவைத் தொகுதியையே கொண்டது. மற்றைய நான்கு மாநிலங்களிலுமிருந்து 73 உறுப்பினர்கள் மக்களவைக்குத் தெரிவு செய்யப்படுவர். இந்த நிலையில் பாரதிய ஜனதா கட்சி அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் எனக் கூறுவது இயல்பானதே. ஆனால், அடுத்த அரசாங்கம் பற்றிய எதிர்வுகூறலில் நான்கு மாநிலங்களின் தேர்தல் முடிவுகளை மாத்திரமன்றி வேறு காரணிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாரதிய ஜனதா கட்சி காங்கிரஸ் கட்சியிடமிருந்து நான்கு மாநிலங்களையும் வெற்றி கொள்ளவில்லை. மத்தியப் பிரதேசத்திலும் சதிஷ்காரிலும் பா.ஜ.க.வே ஆட்சியில் இருந்தது. ராஜஸ்தான் மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சிக்குக் கணிசமான செல்வாக்கு எப்போதும் உண்டு. முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பவரும் செல்வாக்கு மிக்க அரச குடும்பத்தைச் சேர்ந்தவருவமான வசுந்தரா ராஜி முன்னரும் முதலமைச்சராகப் பதவி வகித்தவர். உட்கட்சிப் பிரச்சினை காரணமாகவே பாரதிய ஜனதா கட்சி சென்ற தடவை அங்கு தோற்றது. டெல்லியில் பாரதிய ஜனதா கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற முடியவில்லை.

பிரதமர் பதவிக்கான வேட்பாளராக நரேந்திர மோடியை நிறுத்தியிருப்பதும் பாரதிய ஜனதா கட்சியின் நிலையை ஓரளவு பலவீனமாக்குகின்றது. பாரதிய ஜனதா கட்சிக்குள்ளேயே மோடிக்கு எதிர்ப்பு நிலவியது. எல்.கே. அத்வானி, சுஸ்மா ஸ்வராஜ் போன்ற முக்கியஸ்தர்கள் பகிரங்கமாகவே எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மூன்று தடவைகள் அடுத்தடுத்து முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்ற தர்க்கத்தை மோடிக்கு ஆதரவாகக் கட்சித் தலைமை முன்வைத்தபோது மத்தியப் பிரதேசத்தில் சிவ்ராஜ்சிங் சவ்ஹானும் அந்தச் சாதனையைப் புரிவார் என்று அத்வானி பதிலடி கொடுத்தார். அவர் கூறியது போல சவ்ஹான் இப்போது மூன்றாவது தடவையாக முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அத்வானி எதிர்ப்புத் தெரிவித்ததால் மோடியின் ஆதரவாளர்கள் அவரது வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலையீடு காரணமாகவே அத்வானி தனது எதிர்ப்பைக் கைவிட்டார்.

மோடி தீவிரமான இந்துத்துவவாதி என்பதும், குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் சூத்திரதாரி என்பதும் அவரது பலவீனப் பக்கங்கள். கட்சித் தலைமைக்கும் இது விளங்குகின்றது. பிரதமர் பதவிக்கான வேட்பாளர் என்ற வகையில் மோடி பற்றிய சந்தேகக் கீற்றொன்று தலைமை மட்டத்தில் தோன்றியிருப்பதை மோடியைத் தூக்கிவிடுவதற்கு அவர்கள் மேற்கொள்ளும் பிரசார உத்தியிலிருந்தும் வேறு நடவடிக்கைகளிலிருந்தும் புரிந்துகொள்ள முடிகின்றது. மாநிலங்களில் அடைந்த வெற்றிக்கு நரேந்திர மோடியின் பிரசாரமே காரணம் என்று கட்சித் தலைமை கூறுவதும் பிராந்திய உணர்வுகளைப் பயன்படுத்த முயல்வதும் ஹிந்தி பேசும் தொகுதியொன்றிலேயே மோடி போட்டியிட வேண்டும் என்ற தீர்மானமும் மோடிக்கு ஆதரவாக மேலதிக தள்ளு கொடுக்கும் முயற்சிகள்.

மாநிலங்களில் ஏற்கனவே செல்வாக்கு உள்ள தலைவர்கள் தான் வெற்றியின் நாயகர்கள். மோடியின் பிரசாரம் ஓரளவுக்கு உதவியிருக்கலாமேயொழிய அதுதான் வெற்றிக்குக் காரணம் எனக் கூற முடியாது. டெல்லியில் மோடி பிரசாரப் பொறுப்பு ஏற்றிருந்த நான்கு தொகுதிகளிலும் பாரதிய ஜனதா கட்சிதோல்வி அடைந்ததை விசேடமாகக் கூறலாம்.

தேர்தலுக்காக மத உணர்வைக் கிளறிவிடும் அதன் வழமையான பாணிக்கு மேலதிகமாகப் பாரதிய ஜனதா கட்சி இப்போது பிராந்திய உணர்விலும் கண்வைக்கின்றது. தெலுங்கானாவைத் தனி மாநிலம் ஆக்கப்போவதாகப் பாரதிய ஜனதா கட்சி கூறிவந்த போதிலும் அப்பிரச்சினையில் காங்கிரஸ் முன்கை எடுத்துவிட்டது. அதனால் பா.ஜ.க. இப்போது விதர்ப்பத்தின் பக்கம் திரும்பியிருக்கின்றது. மஹாராஷ்டிராவில் விதர்ப்ப மாநிலத்தை உருவாக்கப் போவதாக பா.ஜ.க.வின் தலைவர் கட்காரி அண்மையில் கூறினார்.



நரேந்திர மோடியின் குஜராத்தி அடையாளம் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கலாம் என்று தலைமை கருதுவதால் அவரை ஒரு ஹிந்தி பேசும் தொகுதியில் நிறுத்துவது பற்றி ஆலோசிக்கின்றார்கள். பாதுகாப்பான தொகுதிகளாகலக்னோவும் வாரணாசியும் இனங்காணப்பட்டுள்ளன. லக்னோ தொடர்ச்சியாக வாஜ்பாய் வெற்றி பெற்ற தொகுதி. ஆனால், இங்கு கணிசமான முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளனர். வாரணாசியில் இந்தப் பிரச்சினை இல்லாத போதிலும் அதிலும் ஒரு சிக்கல்உண்டு. அது முரளி மனோகர் ஜோஸியின் தொகுதி. அவர் விட்டுக்கொடுப்பாரா? எண்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரிக்கற் கொடுப்பதில்லை என்று பொதுவான ஒரு தீர்மானத்தைப் பாரதிய ஜனதா கட்சி எடுத்திருக்கின்றது. ஓரிரு மாதங்களில் எண்பது வயதைத் தாண்டப்போகும் முரளி மனோகர் ஜோஸியைத்தவிர்க்கலாம். எண்பத்தாறு வயதான அத்வானியை என்ன செய்வது? மோடிக்கு அத்வானி காட்டிய எதிர்ப்பை எவ்வளவோ சிரமத்துக்கூடாகவே ஆர்.எஸ்.எஸ். கைவிடப் பண்ணியது. அத்வானியின் தலையில் கைவைத்தால் அவரும் அவரது ஆதரவாளர்களும் மீண்டும் எதிர்ப்பைத் தொடங்க மாட்டார்களா? இவ்விடயத்தில் பாரதிய ஜனதா கட்சி குழம்பிப்போய் இருக்கின்றது.

பாரதிய ஜனதா கட்சியின் அணியில் பிரதான பங்காளி ஐக்கிய ஜனதா தளம். பிஹார் மாநிலத்தில் இரண்டு கட்சிகளும் கூட்டாக ஆட்சி செய்கின்றன. நரேந்திர மோடியைப் பிரதமராக ஏற்பதில்லை என்று ஐக்கிய ஜனதா தளத்தின் நிறைவேற்றுக்குழு ஏப்ரல் 12ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றியது. ஐக்கிய ஜனதா தளத்தின் இந்த முடிவு பாரதிய ஜனதா கட்சிக்குப் பலத்த பின்னடைவு.

காங்கிரஸ் கட்சி மீது மக்கள் கொண்ட அதிருப்தியைப் பாரதிய ஜனதா கட்சி மாநிலத் தேர்தல்களில்அறுவடை செய்தது. நாடு முழுவதிலும் இதுவேநிலை எனக் கூற முடியாது. டெல்லியில் நடந்தது போல காங்கிரஸ் மீது அதிருப்தியுற்ற மக்கள் பாரதிய ஜனதா அல்லாமல் வேறொரு கட்சியின் பக்கம் திரும்பலாம். பிரசாரத்தின் போது பல முனைகளிலிருந்து பாரதியஜனதா கட்சி விமர்சனத்துக்கு உள்ளாகலாம் என்பதால் இதற்கான சாத்தியம் கூடுதலாகவே உண்டு. தேர்தல் நெருங்கி வரும் போது வலுவான மூன்றாவது அணியொன்று உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன.

எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துப் பார்க்கும்போது,அடுத்த அரசாங்கத்தை பாரதிய ஜனதா கட்சியே அமைக்கும் என்பது அவசரப்பட்ட எதிர்வு கூறலாகவே தோன்றுகின்றது. தொங்கு பாராளுமன்றம் அமையும் சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாது.

# ஜனாதிபதிக்கு எந்த வகையிலும் சந்திரிகா சவால் அல்ல

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எந்தவகையிலும் சவாலானவர் அல்ல என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

எமது நாட்டு மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனேயே உள்ளனர். அவரின் வேலைத் திட்டங்களை எதிர்பார்த்துள்ளனர். மக்களைப் பொறுத்தவரை கதாபாத்திரங்கள் என்பது முக்கியமல்ல. மாறாக யார் என்ன கொளகையில் உள்ளனர் என்பதே முக்கியமாகும்.அந்தக் கோணத்தில் நோக்குகையில் ஜனாதிபதியின் கொள்கைகளை மக்கள் முழுமையாக ஏற்றுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு முயற்சிக்கப்படுவதாக தகவல்கள் வந்துள்ளன. ஆனால் அவை குறித்து மேலதிகமாக எந்த விடயமும் தெரியவில்லை.

ஆனால் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த வகையிலும் சவாலானவர் அல்ல. இதனை உறுதியாக கூற முடியும் என்றார்.

# இராணுவ இடமாற்றங்கள் திடீர் செயற்பாடுகள் அல்ல



(கொழும்பு)

இராணுவ இடமாற்றங்கள் வழமையான இடமாற்றங்களே, அது திடீர் செயற்பாடுகள் அல்ல என, இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் றுவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார். இராணுவ வருடாந்த பதவி மாற்றங்கள், ஜனவரி மற்றும் யூன் மாதங்களில் இடம்பெறுகின்றன.

இராணுவ சேவையின் தொழிற்சார் செயற்பாடுகளை சமநிலைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில், உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுகள் உட்பட பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிகளை தொடர்ந்து மீள சேவையில் இணைதல் போன்ற தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, பதவி மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு சேவை, கட்டளைத்தளபதிகள், படைப்பிரிவு பொறுப்பாளர்கள் உள்ளிட்ட இராணுவ தலைமையகத்தின் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் போன்ற பல பதவிகள், இடமாற்றங்களும் இக்காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பதவி மாற்றங்களுக்கு அமையவே, கடமை பொறுப்பேற்புகள் இடம்பெறுகின்றன. என அவர் தெரிவித்துள்ளார்.

# பொழுது போக்குத் தளமாகிய குதிரைப் பந்தயத் திடல்



கொழும்பு கறுவாத் தோட்டப் பிரதேசத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக கைவிடப்பட்டிருந்த கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் கொழும்பை அழகு படுத்தும் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பாழடைந்து கிடந்த பழைய குதிரைப் பந்தயத்திடலும்அதன் பார்வையாளர் மண்டபங்களும் புனரமைக்கப்பட்டு அவற்றில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புனரமைக்கப்பட்ட இந்த பொழுதுபோக்கு மையத்தை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடந்த வெள்ளியன்று திறந்துவைத்தார்.கலை நிகழ்ச்சிக்கான பார்வையாளர் மண்டபம், உணவகங்கள், ஆடை அலங்கார நிலையங்கள், பெண்களின் அழகு சாதனப்பொருள் மற்றும் பரிசுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

குதிரைகள் ஓடிய பழைய தளம் இப்போது ஒரு சர்வதேச ரக்பி விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டுள்ளது.1893 ஆம் ஆண்டில் இந்த குதிரைப் பந்தயத்திடல் அமைக்கப்பட்டது.பின்னர், இரண்டாம் உலகப்போரின் போது இது ஒரு தற்காலிக விமானத் தளமாகப் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் பயணம் நீண்ட தூரம்; கொள்கைக்கு முன்னுரிமை அவசியம்

(கொழும்பு)

அரசியலில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால் கட்சியின் கொள்கைகளுக்கும் ஒழுக்கத்திற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவை நகர சபையின் புதிய கேட்போர் கூடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பல சிரேஷ்ட அரசியல்வாதிகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாகவே தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தனர்.

அதிகாரமும், செல்வமும், தலைவிரித்தாடுவதன் மூலமே இந்த வரவு-செலவுத்திட்டங்கள் உள்ளூராட்சி சபைகளில் தோல்வியடைவதாக கட்சி செயலாளர் என்ற வகையில் என்னால் கூற முடியும். அதிகாரத்துடன் பொருளாதார ரீதியாக தன்னை எவ்வாறு பலப்படுத்திக்கொள்ள முடியும் என்ற சிந்தனையில் செயற்படுவதன் மூலம் இவ்வாறான குழப்பங்கள் ஏற்படுகின்றன. அல்லது குழப்பங்களை ஏற்படுத்துகின்றார்கள்.

ஒரு கனவான் அரசியல்வாதி இவ்வாறு செயற்படமாட்டார். கொள்கையும் மனிதாபிமானமும் உள்ள ஒருவர் சிறந்த அரசியலில் ஈடுபடுவார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உருவான அனைத்து தலைவர்களும் உள்ளூராட்சி சபைகள் ஊடாகவே தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்கள். இன்றைய உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளவர்களை பார்க்கும் போது அவ்வாறான தலைமைத்துவம் ஒருபுறம் இருக்க அவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களிலேயே அஸ்தமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.





பத்தரமுல்லையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் முப்படைகளுக்குமான பாதுகாப்பு தலைமையக நிர்மாணப் பணிகளை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கடந்த 28ஆம் திகதி பார்வையிட்டார்.

# இலங்கையிலுள்ள இந்திய தூதரகங்களின் பாதுகாப்பை பலப்படுத்தக் கோரிக்கை

இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்து இருப்பதால், இலங்கையில் உள்ள தமது தூதரகங்கள் மற்றும் இராஜதந்திர மையங்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங் இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷின் இஸ்லாமிய அரசியல் அமைப்பான ஜமாயத் இஸ்லாமி அமைப்பின் தலைவரான அப்துல் காதர் முல்லா தூக்கிலிடப்பட்டதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மற்றும், ஏனைய பகுதிகளில் உள்ள தூதரகப் பணியகங்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று இந்தியா அச்சம் வெளியிட்டுள்ளது.

இலங்கை தவிர, மேலும் பல தெற்காசிய நாடுகளிலுள்ள இந்தியத் தூதரக நிலைகளும் தாக்கப்படும் ஆபத்து இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதுபற்றிய புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்தே, இலங்கை உள்ளிட்ட பல தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு, தமது தூதரகங்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் தூதரகத்தைக் கொண்டுள்ள இந்தியாவுக்கு, கண்டி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை என மூன்று இடங்களில் துணைத் தூதரகங்கள் இருக்கின்றன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் பணியாளர்களுக்கும் போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக, தெரிவித்துள்ளனர்.

# தெரிவுக்குழுவின் பணிகள் திட்டமிட்டபடி தொடரும்

திட்டமிட்டபடி தெரிவுக்குழுவின் பணிகள் தொடரும் என சபை முதல்வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவருமான நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கெதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்து தெரிவிப்பதொன்றும் புதிய விடயமல்ல. கூட்டமைப்பு திட்டமிட்ட வகையில் தெரிவுக்குழுவுக்கெதிராக அறிவிப்புக்களை விடுபபது வழக்கமானதே. இவை குறித்து அரசாங்கம் ஒரு போதும அலட்டிக்கொள்ள மாட்டாது. கூட்டமைப்பினர் மட்டுமன்றி எந்த ஒரு அரசியல் கட்சி தெரிவுக்குழுவுக்கெதிராக கருத்து தெரிவித்தாலும் அதனை பொருட்படுத்தாது திட்டமிட்டவகையில் எமது பணிகள் முன்னெடுக்கப்படும்.


இதேவேளை சுயாதீனமான குழு என்ற வகையில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட மாட்டாது. கருத்துக்களை கூறுவது அவரவர் உரிமை எனினும் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலான கருத்துக்களுக்கும் அறிவிப்புகளுக்கும் அஞ்சி அரசாங்கம் ஒருபோதும் அதன் செயற்பாடுகளிலிருந்து பின் வாங்கமாட்டாது என்றார்.

# வடக்கு கிழக்கில் மழையுடன் கூடிய காலநிலை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பமாகும் என வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெய்யக் கூடிய மழையினளவு படிப்படியாக அதிகரித்துச் செல்ல வாய்ப்பிருக்கின்றது. இதேவேளை, மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் நண்பகல் அல்லது மாலை வேளைகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும்.

திருகோணமலையிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசத்தில் மழை பெய்வதுடன் வடக்கு, கிழக்காக வீசக்கூடிய காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் திருகோணமலை முதல் அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசம் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படக் கூடுமெனவும் தெரிவிததுள்ளார்.



கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், அதிபர் கே.கே.தவகீஸ்வரன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.அருணகிரிநாதனின் பாரியார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)

# வசதிகளின்றி இயங்கிவரும் அச்சுவேலி வைத்தியசாலை

(அச்சுவேலி)

அச்சுவேலி வைத்திய சாலையானது வசதிகளின்றிய நிலையில் இயங்கி வருவதாக அப்பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது இவ் வைத்திய சாலை விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்களை வசதிகள் போதியளவு இன்மையால் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி விடுவதாகவும் இதனால் ஒரு சில நோயாளர்களே விடுதிகளில் சிகிச்சை பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வைத்தியர்கள் தங்கி நின்று சிகிச்சை மேற்கொள்வதற்கென சகல வசதிகளையும் கொண்ட பெரிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ள நிலையில் சில வேளைகளில் அங்கு வைத்தியர் கள் தங்கி நின்று சிகிச்சை மேற் கொள்வதில்லை என கூறப்படு கின்றது. சில விடுதிகளில் மின்சார வசதிகளும் குறைந்தளவி லேயே காணப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதுடன் சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட வைத்திய சாலையில் மருந்து பெறும் இடத்தில் இருக்கை வசதிகளும் போதியளவு இன்மையால் நோயாளர்கள் சிரமத்துக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில், அம்புலன்ஸ் வசதிகளும் திருப்திகரமான தாக இல்லை எனவும் நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருவைத்தியர்களே சேவையில் ஈடுபடும் நிலையில் இவ் வைத்தியசாலைக்குஅச்சுவேலி, பத்தமேனி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து சிகிச்சைக்காக வரும் மக்கள் வைத்திய சேவைக்காக நீண்ட நேரம் காததிருப்பதாகவும் சில வேளைகளில் சிகிச்சையை பெற முடியாது ஏமாற்றத்துடன் செல்லும் அவலநிலையும் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்

எனவே இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நோயாளர்களுக்கு திருப்திகரமான சேவையினை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (85)

## மீனவர் தங்குமடம் விரைவில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி ஆலடி மீனவர் தங்கு மட கட்டட கூரை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

சுவர் பூச்சு மற்றும் தரை வேலைகள் முடிக்கப்பட்டு விரைவில் தை மாதத்திற்குள் இம்மடம் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊறணி இந்து மயான நிர்வாக பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊறணி இந்துமயான நிர்வாக பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9.00மணிக்கு பொலிகண்டி கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் தலைவர் க.கோபாலசுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் இடம்பெறும். ஊறணி இந்து மயானத்துடன் தொடர்புடைய அனைவரையும் இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

## புகையிலைச்செய்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தீவகப் பிரதேசங்களில புகையிலைப் பயிர்ச்செய்கை இம்முறை அதிகளவு நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புகையிலை பயிர்ச்செய் கைக்கான நாற்றுக்களை விவசாயிகள் திக்கம்,மந்திகை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நாற்றுமேடைகளில் இருந்து பெற்று வருவதுடன் புகையிலை நாற்று முன்னர் 4 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது 2ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. புகையிலை நாற்றுமேடைகளில் நாற்றுக்களின் விளைச்சல் அதிகரித்துள்ளதால் அவற்றின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மதுப்பிரியர்களின் தொல்லை மக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐந்து சந்தியிலுள்ள உணவுச்சாலையில் இரவு நேரத்தில் மதுப்பிரியர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

குறித்தபகுதியில் பலர் ஒன்று கூடி மது அருந்திய பின்னர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதும் பிரயாணம் செய்பவர்களை வழிமறித்து சண்டை பிடிப்பதையும் காணக்கூடியதாக வுள்ளது.

இந்நிலை தொடர்ந்து இரவு வேளைகளில் நடைபெற்று வருவதினால் அயலிலுள்ள வீடுகளில் வசிக்கும் சிறுகுழந்தைகள் பயத்தில் நடுங்கி நித்திரையிலிருந்து எழுந்து அழுவதாகவும், நிம்மதியாக தூங்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் மற்றும், பெரியவர்கள் மறுநாள் வேலைக்கு போவதற்கு முடியாத நிலையுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களுக்கு தொல்லை கொடுக்கும் குடிகாரர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி தண்டனை பெற்றுக்கொடுத்தால் ஏனைய குடிகாரர்களும் பாடம் கற்றுக்கொள்வார்கள் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (105)

## க.பொ.த உயர்தரப் பெறுபேறு

யாழ் • மத்திய கல்லூரி

**கணிதப்பிரிவு**

டபிள்யூ.பேனாஜ்-ஏ,2பி எஸ்.கஜீவன்-3பி,ஜி.ராகுலன்-2பி,சி, எஸ்.டிலக்ஷன்-பி,2சி, எஸ்.அனோஜன்-பி,2சி,எஸ். கிருஷாந்தன்-3எஸ், ஆர்.யதுர்ஷன்-3சி,

**விஞ்ஞானப்பிரிவு**

கே.தஜீவன்-2சி,எஸ்

**வர்த்தகப்பிரிவு**

கே.சிந்துஜன்-3ஏ மாவட்ட நிலை-9,பி.துஷாந்-3ஏ மாவட்டநிலை- 12,ஏ.தனுஷன்-2ஏ,பி கே.சுதர்ஷன்-ஏ,பி,சி, ஜெ. அன்ரன் பிளின்ரன்-3பி, எம்.பாலேந்திரா-2பிசி,கே.மயூரன்-பி,2சி ஆர்.மதிரூபன்-பி,2சி,எஸ்.கவிஷாந்தன்-ஏ,பி,சி

**கலைப்பிரிவு**

எஸ்.கபில்ராஜ்-2ஏ,பி ,ஏ.டினொஸ்ரன்-2ஏ,சி,எஸ், சஞ்சீவன-ஏ,சி,எஸ், ஏ.சயந்தன்-2பி,சி,பி.டர்வின் ஏ,பி,சி, எம்.பவில் ஏ2எஸ் எஸ். முகர்ஷன்-ஏ,சி,எஸ், ஆர். நதீஸ்-2ஏ,சி, ரி.கொலின்ரன்-ஏ,பி,எஸ். (முற்றும்)

# வடமராட்சி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஏழு வருடங்கள் கடமையாற்றிய 53 வயதிற்குட்பட்ட ஆசிரியர்கள் வலய மட்டத்தில ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

முதலாம் தவணைக்கான பாடசாலை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அன்றைய தினமே இவ் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (109)

## முரசின் இன்றைய பலன்



(31.12.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 16 ஆம் திகதி.
கேட்டைநட்சத்திரம் பி.ப 1.16 வரை. பின்மூலம்
சதுர்த்தசி சித்தாமிர்தம்
இராகுகாலம் 03.29 - 04.59 வரை. சுபநேரம் 10.59 - 12.29 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — உடலிலுள்ள கோளாறுகளை 'எக்ஸ்ரே"ஸ்கான் மூலம் கண்டறிய முயற்சித்தல். இங்கிதமாகப்பேசி பிறர் மனங்களைக் கவர்ந்து காரியசித்தி பெறுதல்.

**ரிஷபம்** — உண்மைக்குப்புறம்பாக நடக்காமையினால்"ஐஸ் வைப்போரின் பயறு அவியாமை, பலனை எதிர்பார்க்காது தூய சிந்தனையுடன் கடமையைப் புரிதல்.

**மிதுனம்** — மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நலம்பெற உளவள ஆற்றுப்படத்தல் சிகிச்சையை நாட்டல், உத்தியோகத்தில் உயர்பதவி பெறும் செய்திகிட்டியதால் பரவசமடைதல்.

**கடகம்** — பிள்ளைகளின் நடத்தைகளைக் கண்காணிப்புச் செய்ததால் தவறு ஏற்படாமை,புதியவர்களின் நட்பில் எச்சரிக்கையாக இருந்தமையினால் துயர்விலகல்.

**சிம்மம்** — ஆவணங்கள் இன்மையால் தண்டம், உயரதிகாரியின் மனங்கவர் கள்வனாக இருப்பதினால் மெச்சப்படுதல்.

**கன்னி** — தவறினைக் கண்டிக்காது திருத்த முற்பட்டதால் முரண்பாடு விலகல், பிரமுகரின் உதவியினால் கௌரவப்பதவி கிடைக்க சந்தர்ப்பம் ஏற்படல்.

**துலாம்** — வெற்றி கிடைத்த போதையால் மயங்காது கடமை புரிவதினால் பாராட்டு, அனுபவமே சிறந்த ஆசான் என்பதை கைக் கொண்டதால் துயர் விலகிப்போதல்.

**விருச்சிகம்** — ஏழரைச் சனீஸ்வரனால் கெடுதி ஏற்படாதிருக்க இறை நம்பிக்கையுடன் செயலை ஆற்றல், தோளுக்கு மிஞ்சினால் மகன் தோழன் என நினைத்து விட்டுக் கொடுத்ததினால் பிரச்சினை விலகல்.

**தனுசு** — எவரையும் முழுமையாக நம்பவும் வேண்டாம், தூக்கி எறிந்து பேசவும் முற்படாதீர்கள், வேதனை தீர்வதற்கு புண்ணிய தலத்திற்கு சென்று வரத் தீர்மானம் எடுத்தல்.

**மகரம்** — கட்டுப்பாட்டுடன் வாகன வேகத்தைக்கையாண்டதால் விபத்து விலகிவிடல், உடன் பிறந்தோரின் உதாசீனத்தை எண்ணி மனவாட்டமடைதல்.

**கும்பம்** — மனச் சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட நினைத்து காரிய மாற்றமுற்படல், நட்பு வட்டம் கவின் நிலையை ஏற்படுத்தியதால் மகிழ்ச்சி களைகட்டல்.

**மீனம்** — எதிர்பாராத திடீர் பயணத்திற்கு முகங்கொடக்க நேரிடுதல், தொழிலில் சக ஊழியர்களின் சங்கடங்களை சமயோசியத்தினால் சமாளித்துவிடுவீர்கள்.

## சாதனையாளர்களுடன் கலிஸும் இணைவு



(டேர்பன்)

நவீன கிரிக்கெட் அரங்கில் தலைசிறந்த சகலதுறை வீரராக வர்ணிக்கப்படும் 38 வயதான கலிஸ் இந்திய அணியுடனான டேர்பன் டெஸ்ட் போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். கடைசி டெஸ்டில் சதம் அடித்த சாதனையாளர்களின் பட்டியலில் ஒட்டு மொத்தத்தில் 32ஆவது வீரராகவும், தென்னாபிரிக்க அளவில் 4ஆவது வீரராகவும் கலிஸ் இணைந்துள்ளார். பீற்றர்வான்டெர் பிஜ் (125 ஓட்டங்கள், இங்கிலாந்துக்கு எதிராக, 1939ஆம் ஆண்டு), பேரி ரிச்சர்ட்ஸ்(126 ஓட்டங்கள், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக, 1970), லீ இர்வின் (102 ஓட்டங்கள், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக, 1970) ஆகியோர் ஓய்வுக்கு முன்பாக தங்களது கடைசி டெஸ்டில் சதம் அடித்த தென்னாபிரிக்க வீரர்கள் ஆவர்.

## பனிச் சறுக்கால் வந்த விபரீதம் ஆபத்தான நிலையில் ஷூமேக்கர்



உலக கார் பந்தய சம்பியன் பட்டத்தை ஏழு முறை வென்றவரான, ஜேர்மன் வீரர், மைக்கேல் ஷூமேக்கர், பிரெஞ் ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் ஏற்பட்ட பனிச்சறுக்கு விளையாட்டு விபத்தில் தலையில் அடிபட்டு, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்.

கோமா நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட ஷூமேக்கருக்கு உடனடியாக நரம்பியல் அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது என்று க்ரெனோபிள் மருத்துவமனையின்மருத்துவர்கள் அறிக்கை ஒன்றில் கூறினர்.

மைக்கைல் ஷூமேக்கரின் மிக நெருங்கிய நண்பரும், பிரான்ஸின் முன்னோடி விபத்து சிகிச்சை வல்லுநருமான மருத்துவர்,பேராசிரியர் ஜெரார்ட் செய்லானும் மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்.

ஷூமேக்கர், மெரிபெல் என்ற இடத்தில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது, பாறை ஒன்றின் மீது விழுந்து தலையில் அடிபட்டது என்று செய்திகள் கூறுகின்றன. ஆனாலும் அவர் அப்போது ஹெல்மெட் அணிந்திருந் ததாகவும் கூறப்படுகிறது.

உடனடியாக அவர் ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு அப்புறப்படுத்தப்பட்டார்.

44 வயதான ஷூமேக்கர் ஏழு முறை பார்முலா-1 கார் சம்பியன்ஷிப் போட்டிகளில் உலக சம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார்.

அவர் 2012ஆம் ஆண்டில், இரண்டாவது முறையாக, பார்முலா-1 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

அவருடைய 19 ஆண்டு கார் பந்தய விளையாட்டு வாழ்க்கையில், ஷூமேக்கர் 91 பந்தய வெற்றிகளை ஈட்டியிருக்கிறார். 1999இல் பிரிட்டிஷ் கிராண்ட் பிரி மோட்டார் பந்தயப் போட்டிகளின்போது, ஏற்பட்ட விபத்தொன்றில், ஷூமேக்கரின் கால் முறிந்தது.

2006இல் முதலில் ஓய்வு பெற்ற இந்த ஜேர்மன் நாட்டு வீரர், மூன்றாண்டுகளுக்குப் பின்னர், ஸ்பெயினில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில், கழுத்து மற்றும் முதுகுத்தண்டு பகுதிகளில் காயமடைந்து, பின்னர் நலமடைந்து 2010இல் நடந்த பார்முலா-1 பந்தயத்தில் கலந்து கொண்டார்.

## பிரிவால் வந்த இணைக்கம்



தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஜக் கலிஸ் தனது காதலியான மொடல் அழகி ஷமோன் ஜார்டிமுடன் மீண்டும் இணைந்துள்ளார்.

கிரிக்கெட் வீரர் கலிஸ் டேர்பனில் தனது கடைசி டெஸ்ட் போட்டியை நேற்று நிறைவு செய்தார்..

இந்நிலையில் சமீப காலமாக பிரிந்திருந்த தனது முன்னாள் காதலி ஷமோனுடன் அவர் மீண்டும் இணைந்துள்ளார்.

6 வருடக் காதலை . இடையில் ஜக்கும், ஷமோனும் முறித்துக் கொண்டு தத்தமது வழியில் சென்று கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவருக்கும் இடையிலான பிரிவு இருவரது அன்பையும் உணரச் செய்துள்ளதாகவும், இதனால் இருவரும் மீண்டும் நெருக்கமாகியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கலிஸ் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதும், ஷமோனை அவர் திருமணம் செய்யப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஷமோன் ஒரு மொடல் அழகி ஆவார். அதேசமயம் நடிகையாகவும் இருக்கிறார். கலிஸ் குறித்து ஷமோன் கூறுகையில், அருமையான ஜென்டில் மேன் கலிஸ். எந்தப் பெண்ணுக்கும் அவரைப் பிடிக்கும். இப்படிப் பட்டவர்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

அவர் எப்போதும் என்னை சிரிக்க வைப்பார். கடும் மன அழுத்தத்தில் இருந்தாலும் கூட அவரது பேச்சு என்னை வாய் விட்டு சிரிக்க வைத்து விடும். அதேசமயம், அவர் எப்போதும் கூலாக இருப்பார் என்றும் இது போதாதா ஒரு பெண்ணுக்கு, அந்த ஆணைப் பிடித்துப் போக எனவும் கூறியுள்ளார்.

## பதவிக்கு ஆபத்து



தொடர்ந்து நான்கு டெஸ்ட் போட்டிகளில் படுதோல்வியடைந்துள்ளதால் இங்கிலாந்து கப்டன் 29 வயதான அலஸ்டயர் குக்கின் கப்டன் பதவிக்கு ஆபத்து உருவாகியுள்ளது.ஆனாலும் அவர் கப்டன் பதவியை விட்டு விலகத் தயாராக இல்லை. இது குறித்து அவர் கூறுகையில், 100 சதவீதம் கப்டன் பதவியில் தொடர்ந்து நீடிக்க விரும்புகிறேன். இப்பணியைஉற்சாகமாக செய்து வருகிறேன்.அணியின் கப்டன் என்றமுறையில் தோல்விக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். ஆஷஸ் தொடர் முடிந்த பின்னர், கப்டன் பதவிக்கு நான் பொருத்தமானநபராக இல்லை என்று தேர்வுக் குழு முடிவு செய்தால், அதை செய்யட்டும் என்றார்.

## இன்று முதல் டெஸ்ட்

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவதுடெஸ்ட் போட்டி இன்று அபுதாபியில் உள்ள ஷேய்க் சியாத் மைதானத்தில்ஆரம்பமாகவுள்ளது. இரு அணிகளும் சம பலம் கொண்டவையாக இருப்பினும் குறித்த மைதானம் பாகிஸ்தான் அணிக்கு சாதகமானது எனலாம். இம் மைதானத்தில் இது வரை 4 டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்றுள்ளனபாகிஸ்தான் அணியுடன் இலங்கை, தென்னாபிரிக்க மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதியுள்ளன. பாகிஸ்தான் - தென்னாபிரிக்காவுடனும் இங்கிலாந்துடனும் இம் மைதானத்தில் வெற்றி பெற்றுள்ளது. அத்தோடு பாகிஸ்தான், இலங்கையுடனும் தென்னாபிரிக்காவுடனான மற்றுமொரு போட்டியிலும் மோதி சமநிலையில் முடிந்துள்ளது.

இதேவேளை,இறுதியாகஇலங்கை விளையாடிய ஐந்து டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் வெற்றியும் மூன்றில் தோல்வியையும் சந்தித்துள்ளது. ஒரு போட்டி சமநிலையில் முடிந்துள்ளது. பாகிஸ்தான் அணியை பொறுத்தவரை இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று மூன்று போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.



## பிரெட்லீயின் கொலைவெறி

அவுஸ்ரேலிய முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் பிரெட் லீ, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பியர்ஸ் மோர்கன் என்பவரை கொலை செய்திருப்பார், இது கண்டிக்கத்தக்கது என்று நியூசிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சு மேதை ரிச்சர்ட் ஹட்லி அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பிரட்லீயை நேர்முகம் கண்டுள்ளார் தொலைக்காட்சி ஒருங்கிணைப்பாளர் பியர்ஸ் மோர்கன்,அப்போது இங்கிலாந்து வீரர்களின்தைரியம் பற்றி இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் ஏதோ கூறப்போக என்ன நினைதாரோ பிரெட் லீ உடனே அந்த பேட்டி கண்ட மோர்கனை தனது ஒரு ஓவரை விளையாட வா என்று சவாலுக்கு அழைத்தார். சவாலை ஏற்றுக் கொண்டு பியர்ஸ் மோர்கன் களமிறங்கினார். ஆனால் பிரெட் லீ அந்த 48 வயதானவருக்கு வீசிய ஓவர் அப்பப்பா...! ரிச்சர்ட் ஹட்லி வாயிலிருந்தே அதனைக் கேட்போம்:

ஒரு வேகப்பந்து வீச்சாளராக பிரெட் லீ வீசிய அந்த கொடூரமான ஓவரைக் கண்டு நான் அதிர்ந்தே போனேன். அவர் வீசிய பந்து வீச்சு உண்மையில் உயிருக்குஆபத்தானது. மோர்கனால் எப்படி பிரெட் லீயை ஆட முடியும், அவர் உடலில் பந்து 4 முறை அடித்து அவரைக் காயப்படுத்தியது. ஒரு பந்து மண்டைக்கோ அல்லது இருதயத்தை நோக்கியோ வந்திருந்தால் மோர்கனுக்கு என்னவேண்டுமானாலும் ஆகியிருக்கும், இது காட்டுமிராண்டித் தனம், ஒரேயொரு பந்தை மட்டும்தான் பிரெட் லீ நேர்மையாக வீசினார். மற்ற பந்துகளெல்லாம் துடுப்பாட முடியாத அந்த 48 வயது மனிதரின் உடல் உறுப்புகளை குறிவைத்து வீசினார் லீ. உடலின் நடுப் பகுதியிலிருந்து தலை வரை அனைத்து இடங்களையும் பிரெட் லீ குறிவைத்து வீசினார். இது அராஜகம் எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மதியம் மெல்பேர்னில் நடைபெற்ற இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியின் தேநீர் இடைவேளையின்போது இச்சம்பவம் நடந்துள்ளது. பிரெட்லீயின் பந்து வீச்சில் மோர்கன் உடல் பூராவும் காயம் ஏற்பட்டுள்ளது தொலைக் காட்சியில் காண்பிக்கப்பட்டுள்ளது.

## மஹேலவின் ஆதங்கம் கருத்தில் கொள்ளப்படுமா?

இலங்கை அணி மேலும் அதிகமான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். கிரிக்கெட் சபையின் நடவடிக்கை காரணமாக பல டெஸ்ட் தொடர்கள் கைவிடப்பட்டது கவலை அளிக்கின்றது என இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் அண்மைக் கால நடவடிக்கைகளின் காரணமாக அண்மைக் காலத்தில் அதிகளவிலான டெஸ்ட் தொடர்களை நாம் இழந்திருக்கின்றோம். குறிப்பாக, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்க அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடர் என்பன அண்மைக்காலத்தில் இலங்கை கிரிக்கெட் சபையால் பிற்போடப்பட்டிருந்ததோடு, சிம்பாப்வே அணிக்கெதிரான தொடர் சிம்பாப்வே கிரிக்கெட் சபையால் பிற்போடப்பட்டிருந்தது.

2013ஆம் ஆண்டில் இலங்கை அணி போதியளவிலான கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை. இன்னமும் அதிகமான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். அப்பொழுதுதான் இளம் வீரர்களின் திறன் வெளிக்கொணரப்படும்.

இலங்கை அணி அதிகளவிலான போட்டிகளில் பங்குபற்றாமை துரதிர்ஷ்டவசமானது. எனினும் வீரர்களால் கட்டுப்படுத்தப்படாத விடயங்கள் குறித்து ஆராய்வதை விடுத்து, கிடைக்கப்பெறும் போட்டிகளில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்துவது குறித்து ஆராய வேண்டும். இன்று ஆரம்பமாகவுள்ள பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு அணியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்ய முயற்சிப்பேன் எனவும் தெரிவித்தார்.



## ஆஸி. அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்தா வது ஆஷஸ் டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.அவுஸ்ரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்குபற்றி வருகின்றது. இதில் அவுஸ்ரேலிய அணி நான்கு போட்டிகளில் வெற்றிபெற்று தொடரைக் கைப் பற்றியுள்ளது. இந்நிலையில் சிட்னியில் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள போட்டிக்கான அவுஸ்ரேலிய குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியக் குழாம்: கிறிஸ் ரோஜர்ஸ், டேவிட் வோர்னர், வட்சன், மைக்கல் கிளார்க், ஸ்டீவன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, அலெக்ஸ் டூலன், பிரட் ஹடின், ஜேம்ஸ் போக்னர், ஜோன்சன், ஹரிஸ், பீற்றர் சிடில், நதன் லயன், நதன் கோர்ட்டர் நீல்.

# இளைஞர் கிண்ணம் தையிட்டி வள்ளுவர் வசம்



(சண்டிலிப்பாய்)

இளைஞர் கழக வெற்றிக் கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை தையிட்டி வள்ளுவர் அணி கைப்பற்றிக் கொண்டது.

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்திய இளைஞர் வெற்றிக் கிண்ணத் தாச்சிப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தாவடி காளியம்பாள் அணியும், தையிட்டி வள்ளுவர் அணியும் மோதின. இரு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் இப்போட்டி குறித்து அதிக எதிர்பார்ப்பு இரசிகர்களிடையே இருந்தது. இதற்கமைய முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தங்கள் உச்ச திறனை வெளிப்படுத்தியதுடன் மாறிமாறி புள்ளிகளைப்பெற்றுக் கொண்டன. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணி களும் தலா 3 புள்ளிகளைப் பெற்று சமநிலையில் இருந்தன.

பிற்பாதி ஆட்டத்தில் புது யுத்தியுடன் களமிறங்கிய தையிட்டி வள்ளுவர் அணி வேகமாக புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெற்றது. இதற்கு தாவடி காளியம்பாள் அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இறுதியில் தையிட்டி வள்ளுவர் அணி 6-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் ஏராளமான தாச்சி இரசிகர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். இப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சித்தார்த்தன், ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண் டனர். (93,48)

# வென்றது அண்ணா, நாகம்பாள்

(அராலி)

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டப் போட்டிகளில் அண்ணா, நாகம்பாள் ஏ அணி வெற்றிபெற்றது.

தைத்திருநாளை முன்னிட்டு நடாத் தப்பட்டு வரும் இக்கால்பந்தாட்டத் தொடர் அராலி மாவத்தை விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் போட்டியில் வட்டுக்கோட்டை அண்ணா அணியும், தெல்லிப்பளை நாகம்பாள் பி அணியும் மோதின. அதில் அண்ணா ஏ அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சண்டிலிப்பாய் கல்வயல் விநாயர் அணியும், தெல்லிப்பளை நாகம்பாள் ஏ அணியும் மோதின. இதில் நாகம்பாள் ஏ அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)

# லதீபன் சம்பியன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஒரு நாள் கோல் மழை கூடைப் பந்தாட்டப் போட்டியில் லதீபன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டி நேற்று முன்தினம் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அணிக்கு ஒருவர் மட்டுமே பங்குகொண்ட இப்போட்டியில் 16 பேர் பங்குகொண்டனர். இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மதுஷன் மற்றும் லதீபன் ஆகியோர் மோதி-னர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் லதீ-பன் 24-20 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

வீரர்களின் ஆட்டத் திறனை அதிகரிக்கும் வகை யில், அவர்களின் உடற்தகுதிக்கு சவால் அளிக்கும் வகையிலும் இப்போட்டி நடாத்தப்பட்டதாகவும், இது போன்ற போட்டிகளை நடாத்துவதன் மூலம் வீரர்களின் தரத்தை அடுத்த நிலைக்கு முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (93)





கிரிக்கெட் தரத்தை நவீனப்படுத்தும் முகமாக இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், இலங்கை கிரிக்கெட் சபை ஆகியன ஒன்றிணைந்து மாவட்ட பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் பயிற்றுநர்களுக்கு பயிற்சி முகாம்களை நடாத்தி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக கடந்த வாரம் யாழ். மாவட்ட பாடசாலை களில் பயிற்றுவிக்கும் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சித, இலங்கை கிரிக்கெட் சபையின் முதல்தரப் பயிற்றுநர்கள் கலந்து கொண்டு கிரிக்கெட் தொடர்பான நுட்பங்களை செயன்முறை மூலம் விளக்கமளித்தனர். இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் சபையின் கனிஷ்ட தேர்வாளர்களில் ஒருவரான நிசாந்தன் கலந்துகொண்டார். (எஸ்.பி., 48)

## விளையாட்டுச் செய்திகள்

# அராலியில் இன்று கரப்பந்து

(அராலி)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் வலி காமம் பிரதேசத்திற்குட்பட்ட கரப்பந்தாட்ட அணி களுக்கிடையில் நடாத்தும் மின்னொளியிலானகரப் பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் 7.00 மணிக்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி விலகல் முறை யில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# கிண்ணம் வென்றது உடுவில் கிங்ஸ்ரார்

(உரும்பிராய்)

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உடுவில் கிங்ஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணி களுக்கிடையில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு இணுவில் யுத் அணியும், உடுவில் கிங்ஸ்ரார் அணியும் தகுதி பெற்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இணுவில் யுத் அணி சிவா, விஸ்ணுஆகியோ ரின் பந்து வீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கோகுலராஜ் நிதானமாக ஆடினார். இறுதியில் இணுவில் யுத் அணி 11.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோகுலராஜ் 13, மோகன்ராஜ் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிவா மூன்று, விஸ்ணு இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுவில் கிங்ஸ்ரார் அணி 11.3 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக் களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மயூரன் 18, ஜேம்ஸ் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயந்தி மூன்று, கார்த்திக் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கிங்ஸ்ரார் அணி வீரர் சிவா, தொடர் ஆட்டநாயகனாக அதே அணி வீரர் மயூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கந்தையா நல்லதம்பி நினைவு கால்பந்து லீக் ஆட்டங்களில் வென்ற அணிகள்

(சுன்னாகம்)

கந்தையா நல்லதம்பி நினைவுக் கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்களில் இளவாலை யங்ஹென் றிஸ், நியூவொரியஸ், ஞானமுருகன் அணிகள் வெற்றிபெற்றன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனு சரணையுடன் சூராவத்தை நியூவொரியஸ் விளை யாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரு ம் கந்தையா நல்லதம்பி நினைவுக் கால்பந்தாட்டத் தொடர் நியூ வொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் னொளியில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடர் லீக் முறையில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு மூன்று போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் நவிண்டில் கலை மதி அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதவிருந்தன. இதில் நவிண்டில் கலைமதி அணி சமூகமளிக்காததால் இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் இணுவில் கலாஜோதி அணியும், நியூ வொரியஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே நியூவொரியஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. கலாஜோதி அணி பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்டபோதும் அதனால் வெற்றிபெற முடியவில்லை. இறுதியில் நியூவொரியஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், அராலி ஏ.எல். அணி யும் மோதின. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி போட்டி ஆரம்பித்தது முதல் நிறைவு பெறும் வரையிலும் ஆதிக்கம் செலுத்தியது. இதில் பந்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க அங்கும் இங்குமாக அராலி ஏ.எல். தாவித் தவித்தது. இறுதியில் மயி லங்காடு ஞானமுருகன் அணி 7-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டிகள் லீக் அடிப்படையில் நடைபெற்று வருவதாகவும், அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் இரண்டா வது சுற்றுக்குத் தகுதி பெறும் என போட்டி அமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



# தீக்குள் விரலை வைத்தால்

– குமரன் கிருஷ்ணன்



1980களில் எங்கள் ஊர் பேருந்து நிறுத்த தேநீர்க் கடை அருகே தெருவில் அவர் அமர்ந்திருப்பார். ஆறடிக்கும் மேலான ஒடிசலான தேகம். "கோட்டு" என்று எண்ண வைக்கும் வடிவத்தில், பழுப்பேறிய வெள்ளை நிறத்தில் ஒரு அங்கி. ஒரு துணி மூட்டை.

அவரின் முன், சில துணிகளும் பேப்பர்களும் குவிக்கப்பட்டு தீ எரிந்து கொண்டிருக்கும். தீயினையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் அவர், நினைவின் காலத்தில் வைத்திருந்த கால் இடறி நிகழ்காலத்தில் விழுந்தது போல் சட்டென்று தனது மூட்டையிலிருந்து ஒரு துணியை எடுப்பார். நினைவு மூட்டையில் இருந்து உருவிய சம்பவத்தின் ஆடையாக இருக்குமோ? ஊசி நூல் கொண்டு அந்தத் துணியை தைக்கத் துவங்குவார். தைத்த துணியை அந்த நெருப்பில் போடுவார். அவரின் மூட்டை என்றும் வற்றியதேயில்லை. வற்றாத நினைவுகளை தீயின் உணவாக இட்டு எந்த தீயை அணைக்க முயன்று கொண்டேயிருந்தாரோ அவர்?

தொலைக்காட்சிகளின் தொல்லையின்றி அற்புதமாக இருந்த அன்றைய ஞாயிறுகள் ஒன்றின் அமைதியான மதியம், எங்கள் தெருவின் ஒரு புறம் நீண்டிருந்த கோயில் மதில் சுவரில் கரிக்கட்டியால் ஒரு உருவத்தை ஓவியமாய் வரைந்தார். புற அடையாளங்கள் அற்ற நினைவின் ஓவியம் போலும்... அதன் பின், தினமும் அந்த ஓவியத்தின் அருகில் நின்று பார்ப்பதும் பிறகு தனக்குரிய இடத்திற்கு வந்து தீ வளர்ப்பதுமாக இருந்தார்.

பல மாதங்கள் இது தொடர்ந்தது. ஓரிரு வருடங்கள் கழித்து, கோயில் சுவர், வண்ணம் அடிப்பதற்கு தயார் செய்யப்பட்டது. அவரின் ஓவியம் அழிக்கப்படும் நிலையில் அவர் ஆக்ரோஷமாக எதையேனும் செய்யக்கூடும் என்று நாங்கள் அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் அவரோ, தனது ஓவியத்தின் மீது புதுவண்ணம் படிந்து அது மெதுவாய் அழிவதை மௌனமாக பார்த்தபடி இருந்து விட்டுச் சென்றார்.

தேநீர்க் கடைக்காரர் அவருக்கென ஒரு கிளாஸில் தேநீர் தருவது வழக்கமான காட்சி. அந்த காலை வேளையில் கடைக்காரரின் தயவில் காலை நேர திரை இசை ஒலிப்பதும் நான் பேருந்துக்கு நிற்பதும் கிட்டத்தட்ட கால அட்டவணை போல நாள் தவறாது நடக்கும் ஒருங்கிணைந்த நிகழ்வாகிப் போனது. சில பாடல்களுக்கு காந்த சக்தி உண்டு. பேருந்து நிலையத்தில் இருந்து மெதுவாக என்னை நகர்த்தி நகர்த்தி, அந்தத் தேநீர்க்கடை கூரையின் கீழ் கொண்டு போய் நிறுத்தி விடும். ஒரு முறை அவ்வாறு காந்தத்தில் கவரப்பட்டு கடை நிழலில் பேருந்துக்காக காத்திருந்தேன். "பூவே செம்பூவே" பாடல் (சொல்லத் துடிக்குது மனசு - 1988) வெளிவந்திருந்த நேரம். இந்தப் பாடல் நம் மனதின் ஆழ் கிணற்றில் மிகப்பெரிய கல் ஒன்றை தூக்கி எறியும் வேலையைச் செய்யும். உள்ளே உறைந்திருக்கும் பாசி பூத்த நினைவுகளின் நீர், தன் தேக்கத்திலிருந்து சிலிர்த்து உயிர்ப்பிக்கும்.

இந்தப் பாடலின் துவக்கமே நாம் நினைவில் நீந்த தயாராகும் வகையில் ஒரு வித கிறக்கம் கொடுக்கும். மழையின் துளிகள் தலையின் மயிர்கால்களின் வேர் வழியே தோலின் செதில்களில் இறங்கி மூளையில் உறங்கும் நினைவுகளை எழுப்பி, ஒவ்வொன்றாக மனதுக்கு அனுப்புவது போல கிற்றாரின் சொட்டுகள்... பின்னர் ஆரம்பிக்கிறது பாடல் வரிகள். மழையின் துளிகள் என்றாலே அது நினைவின் உளிகள் தானே?

எத்தனை பரிமாணங்களில் இந்தப் பாடலை நம்மால் கேட்க முடிகிறது! பாட்டு முழுவதும் அடுக்குகளாய் அணிவகுக்கும் வயலினையும் கிற்றாரையும் மனதின் கைப்பிடியாக பிடித்துக் கொண்டே ஒரு முறை பயணம் போகலாம்... கேட்பவரின் ஞாபக நரம்புகளின் மீதல்லவா இந்த வயலின் லாவகமாக வாசிக்கப்படுகிறது. அதிலிருந்து பிறக்கும் ஒலித்துணுக்குகள் ஒவ்வொன்றும் நினைவின் கணுக்கள் போலல்லவா தொடர்கிறது... அதிலும் குறிப்பாக, சரணங்களின் அனைத்து பகுதிகளிலும் புகுந்து வெளிப்படும் வயலின், "நிழல் போல நானும்" என்ற வரியின் போது மட்டும் முதல் முறை மௌனம் காத்து, மறுமுறை ஊற்றெடுக்க துவங்குவதை நாம் எவ்வாறு உள்வாங்குவது?

"நினைவு" என்பதே இரண்டு அடுக்குகள் கொண்ட மனதின் உணர்வு நிலையை உள்ளடக்கிய ஒற்றைச் சொல்லோ? ஏனெனின், நினைவு என்றாலே அது நினைவையும், அந்த நினைப்பினால் ஊற்றெடுக்கும் நிகழ்கால உணர்வுகளையும் உள்ளடக்கியது தானே? எனவே இதை இசைக்குள் நுழைத்து சிந்தனையின் விசையாக்கி நமக்குத் தர வேண்டுமென்றால் அதன் கோர்வையிலும் இரண்டு ஒலி அடுக்குகள் தேவைப்படுமோ? எனவே தான் இளையராஜா இந்தப் பாடலின் சரணங்களில், மேற்கூறிய வரியின் அடியில் மட்டும் காக்கும் மௌனத்திற்குப் பின், வயலினையும் கிற்றாரையும் மேலடுக்கு கீழடுக்காய் பெரிய அலையின் மடிப்புகளில் சுருண்டு வரும் சிறிய அலை போல் இரண்டையும் கரைபுரள வைத்திருக்கிறாரோ?

ஆள் நடமாட்டம் குறைந்த அந்த இரவின் பொழுதில், அந்தத் தெருவெங்கும் தன் இதழ்கள் விரிய மலர்ந்து கொண்டிருந்தது "பூவே செம்பூவே..." வயலினில் வழிந்த துயரத்தின் சாயல் கிற்றாரில் தேங்கி அதை கப்பாஸ் ஒற்றி எடுத்துக் கொண்டிருக்கும் முதல் சரணம் முடிகின்ற நேரம்... சட்டென்று அந்தத் துணிமூட்டைக்காரர் எழுந்து தெருவின் குறுக்கே கடந்து எதிர்ப்புறத்தை அடைந்தார். ஓவியம் இருந்த இடத்தில், அதன் கோடுகளை அவர் அறிந்த விதத்தில், விரல்களை நகர்த்தினார். கோடுகளின் பாதையில் விரல்கள். விரல்களின் போகும் பாதையெங்கும் நினைவின் பரல்கள் சிதறியிருக்கக் கூடும். கோடுகளின் பாதையில் சென்ற விரல்கள் தாள முடியாத நினைவின் வலியில் துடித்தனவோ? சற்றும் எதிர்பாராத பொழுதில், முகத்தை ஓவியம் இருந்த இடத்தில் ஒட்டித் தேய்த்து அவர் குலுங்கி அழுவதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்தேன் நான்.

நிமிடங்கள் கரைந்த பின் நரைத்த தாடியில் ஆங்காங்கே தேங்கியிருந்த துயரத்தின் துளிகளுடன் தனது இடத்திற்கு வந்து மீண்டும் "தைக்க"த் துவங்கினார். நிகழ்வின் சூட்டுடன் எரிந்து கொண்டிருந்தது நெருப்பு. எரிவதும் எரிப்பதும் மட்டுமா நெருப்பின் தன்மை? அவரின் கைகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. காலகாலமாக நாம் கற்பித்து வைத்திருக்கும் தப்பர்த்தங்களின் வழியே ஏற்பட்ட தயக்கமும் பயமும் என்னை அவர் அருகில் செல்ல விடாமல் தடுத்தன. அன்று ஆறுதலாக ஒரு நிமிடம் அவரின் கைகளை பற்றிக் கொண்டிருந்திருக்கலாமோ என்று இன்று நினைக்கையில் மனம் சற்று கூனிக் குறுகுகிறது.

ஆண்டுக்கணக்கில் அவர் அமர்ந்து போன இடம் இன்று அடையாளம் தெரியாமல் மாறி விட்டாலும் அந்த இடத்தை கடந்து எங்கள் வீட்டுக்கு போகையில் அவரின் நினைப்பு சில சமயம் எழும். அத்துடன் "செம்பூவின்" வாசனையும் வரும். அனிச்சையாக எனது கண்கள் எதிர்ப்புறம் திரும்பி கோயில் சுவற்றில் மறைந்து போன ஓவியம் இருந்த இடத்தை நோக்கும். அதன் மேல் பல முறை வண்ணப்பூச்சுக்கள் அடித்து வருடங்கள் வடிந்து விட்டன. ஓவியத்தின் தடத்தை தனக்குள் தாங்கி அப்படியே இருக்கிறது கோயில் சுவர். காலத்தைப் போல...



தமிழரசுக்கட்சியில் உள்ள அமிர்தலிங்கம் போன்றவர்களைப் போல உணர்ச்சியைத் தூண்டும் வகையில் உரத்துப் பேசத்தெரியாத ஒருவர். "மிகவும் மென்மையானவர்", "அகிம்சாவாதி" என எல்லாம் வர்ணிக்கப்படுபவர். அவரே இப்படித்தான் அரியரத்தினத்துக்கு துரையப்பாவின் கொலை பற்றி கருத்துக் கூறியிருக்கிறார்! அவ்வளவிற்கு தமிழ்த் தேசியவாதம் தனது சிந்தனை முழுவதும் வன்முறையைத்தான் நிரப்பி வைக்கிருந்திருக்கிறது!

# தமிழ்ச் சிந்தனை முழுவதும் வன்முறை!

- இயக்கச்சி மணியத்தின் தொடரிலிருந்து.

இந்தக் கொலைக் கலாசாரம் புலிகளாலே மட்டும் உருவாக்கப்பட்டதல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் அ.அமிர்தலிங்கம் போன்றவர்கள் தமது எதிரிகளைத் "துரோகிகள்" என்று வசைபாடத் தொடங்கிய பின்னர், தமிழர்களின் "தந்தை" என வர்ணிக்கப்பட்ட எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் முன்னிலையிலேயே, "தமிழ் துரோகிகளுக்கு இயற்கை மரணம் கிடையாது" என அவர்களது மேடைப் பேச்சாளர்கள் முழக்கமிட்ட போது, அதை தமிழர் கூட்டணித் தலைவர்கள் யாருமே தடுத்து நிறுத்தாமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். இது ஒரு சாதாரண விடயமல்ல. (இவர்களது வாரிசுகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்தான், இன்று அரச பயங்கரவாதம் பற்றி வாய் கூசாமல் பேசுகின்றனர்)

அதைத்தொடர்ந்து பிரபாகரனே நேரடியாகப் பங்குபற்றிய யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவின் கொலையை புலிகள் செய்து வைத்து, கொலைக்கலாசாரத்துக்கு பிள்ளையார் சுழி போட்டனர். அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்ட நேரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இந்த இடத்தில் சொல்லியே ஆக வேண்டும்.

அல்பிரட் துரையப்பா சுடப்பட்ட நேரத்தில் தமிழரசுக்கட்சி தீவிர தனித்தமிழீழப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த காலம். தமிழரசுக்கட்சியின் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியினரால் "சிந்தனைச் சிற்பி" என அழைக்கப்பட்டவருமான சி.கதிரவேற்பிள்ளை (அதற்கு முதல் அக்கட்சியின் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வ.நவரத்தினத்தை "தமிழரசுக்கட்சியின் மூளை" என்று வர்ணித்து வந்தனர். ஆனால் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அந்த மூளை கழன்று சென்றுவிட்டது) யாழ்ப்பாணத்தில் குரோசெற் ஒழுங்கையில் வசித்து வந்தார். அவருக்கு அடுத்த வீட்டில் வசித்தவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பகுதி மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் ஐ.ஆர்.அரியரத்தினம்.

இடையிடையே கதிரவேற்பிள்ளையும், ஐ.ஆர். அரியரத்தினமும் சந்தித்து உரையாடுவது வழக்கம். துரையப்பா சுடப்பட்ட நேரம் அதுபற்றி கதிரவேற்பிள்ளையிடம் அரியரத்தினம் விசாரித்திருக்கிறார். அந்தக் கொலையை கதிரவேற்பிள்ளை வன்மையாகக் கண்டிப்பார் என்ற எதிர்பார்ப்பிலேயே அரியரத்தினம் அதுபற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

ஆனால் அதற்கு கதிரவேற்பிள்ளை சொன்ன பதில், "இப்படியான ஆட்களை வேறென்ன செய்யிறது?" என்பதாகும். இவ்வளவிற்கும் கதிரவேற்பிள்ளை

## இந்தியாவி...
## ஏழை முதல...



பதவி வகிக்கி...
இந்தியாவி...
மாக்சிஸ்ட் கம்...
சர்க்கார் அடுத்...
வகிக்கின்றார்.
இவரது அசை...
இரண்டரை இ...
சட்ட சபை...
சமர்ப்பித்த சத்...
இருந்த பணம்...

# கார்ல்மார்க்ஸ் தம் காதலிக்கு எழுதிய கடிதம்



அன்புள்ள ஜென்னி

ரைன்லாந்து கெஜட் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டேன். இப்படி ஒரு பதவியில் அமர்ந்து நிர்வாகம் செய்வதே எனக்குப் பிடிக்காத விஷயம். இப்படி ஒரு பிடிக்காத விஷயத்தில் நான் ஈடுபட்டதற்குக் காரணம் சாட்சாத் நீதான்.

என் பிரிவு உன்னை எவ்வளவு தூரம் வாட்டுகிறது என்று எனக்குத் தெரியும். வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பொருளாதாரச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்ட பிறகுதான் உன்னை மணப்பது என்பது என் தீர்மானம் என்று உனக்குத் தெரியும். உன்னை மணக்க வேண்டும் என்ற நினைவு பலமாக உந்தியதால்தான், ரைன்லாந்து கெஜட் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

....... என் பொருட்டுப் பல இன்னல்களை அனுபவிக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். நான் வருத்தப்படவில்லை. மகிழ்ச்சி அடைந்தேன். இதுதான் உண்மை வாழ்க்கை. பிறர் பரிகாசம் செய்கிறார்களே என்று அஞ்சாதே! உன் மனதை உறுதிப்படுத்திக் கொள்.....

**(ஆர். ஷண்முகம் 'உலக உண்மைகள்' நூலில்)**

# மின்னல்



• மேகத்தினுள் எப்போதாவது வலிமையான காற்று நுழைந்தால் அது வேகமாக சுற்றிலும் உள்ள நீர்த்துளிகளுடன் மோதும். அப்போது அவை ஒன்றோடு ஒன்று பலமாக மோதி படபடவென வெடித்து நிலையான மின்சாரத்தை உண்டாக்கும். அவையே திடீரெனத் தோன்றும் மின்னல் கோடுகள் ஆகும்.

• மின்னல் நாம் நினைப்பது போல் கோடு வடிவில் மட்டும் தோன்றுவதில்லை? அது கிளை விட்ட வடிவிலும், தாள், நாடா மற்றும் பந்து வடிவிலும் தோன்றும். பந்து மின்னல் என்பது தீப்பந்து போலிருக்கும். சில இடங்களில் மக்கள் பந்து மின்னல்கள் வீட்டினுள் மிதந்து சென்று மோதுவதைப் பார்த்துள்ளனர்.

• ஒரு மின்னல் 250 கோடி வாட்ஸ் மின்சார சக்தியுடையது.

• ஒவ்வொரு மின்னலும் விநாடிக்கு 28,500 மைல்கள் வேகத்தில் பூமியை நோக்கிப் பாய்கிறது.

## ...ாவின் ...தலமைச்சர்

தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்த காமராஜர் தனக்கெனச் சொத்துச் சேர்க்காதவர் என்றும் ஏழையாகவே இறந்தார் என்றும் கூறுவர். தனக்கெனச் சொத்துச் சேர்க்காத ஒரு முதலமைச்சர் இப்போதும் இந்தியாவில் ... வகிக்கின்றார்.

...ந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுள் ஒன்றான திரிபுராவில் ...ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நடைபெறுகின்றது. மானிக் ...ர் அடுத்தடுத்து நான்காவது தடவையாக முதலமைச்சராகப் பதவி ...கின்றார். நான்கு தடவைகள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ...து அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் மொத்தப் பெறுமதி ...டரை இலட்சம் ரூபா மாத்திரமே.

...ட சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரத்துடன் ...பித்த சத்தியக் கடதாசியின்படி அப்போது இவரது வங்கிக் கணக்கில் ...த பணம் 9720 ரூபா.

# ஏன் இந்த அவசரம்?

**- அ. குமார்**

ஒரு பிரபல மருந்து தயாரிப்பு கம்பெனியொன்று உலகில் இளம் வயதிலேயே நம்மைவிட்டுப் பிரிந்த பிரபலங்களை பட்டியலிட்டு அவர்களது புகைப்படங்களையும் வெளியிட்டு, எங்கள் கம்பெனி மருந்துகள் மட்டும் அப்போது கிடைத்திருந்தால் உயிர் பிழைத்திருப்பார்கள் என்று விளம்பரப்படுத்தியது. அவர்களைப் பற்றிய தகவல்களை படிக்கும் போது இந்த உலகைவிட்டு போக உண்மையான காரணம் என்ன என்ற கேள்வி நிச்சயம் எழும்.

1821 ஆம் ஆண்டு 26ஆவது வயதில் கவிஞர் ஜோன்கீட்ஸ், காசநோயால் இறந்த போது உண்மையில் அப்போது ஸ்டெப்ரோமைசின் கண்டுபிடிக்கப்பட்டிருக்குமானால் நிச்சயம் அவர் உயிர் பிழைத்திருப்பார். மேலும் காசநோய் அவரது பரம்பரை நோயாக இருந்தது. அவர் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது மருத்துவர்கள் அவரை கடற்கரைப் பிரதேசத்தில் வசிக்கும்படியும், நாள்தோறும் அருகில் உள்ள மலைமீது ஏறி இறங்கும்படியும் கடினமான வேலைகளைச் செய்யும்படியும் அறிவுறுத்தினார். அவரது காதலி ∴ பெனிபிரவுன் அவருக்கு ஆதரவாக இல்லை. 1820ஆம் ஆண்டு இத்தாலி சென்ற கீட்ஸ், சில மாதங்களில் இறந்து போனார். இறப்பதற்கு முன் தன் கல்லறையில் பொறிக்கச் சொன்ன வாக்கியம் இது தான் "இங்கு உறங்குபவன் பெயர் தண்ணீரில் எழுதப்பட்ட சாசனம்".

அவரது சமகாலத்தில் வாழ்ந்த ஷெல்லி, கீட்ஸின் கவிதைகள் "ஜோன் கீட்ஸின் கவிதைகள்" என்ற தலைப்பில் வெளியிட உதவினார். இவரும் இத்தாலி அருகில் கடற்பயணம் மேற்கொண்டிருந்த போது கடலில் தவறிவிழுந்து இறந்தார். அப்போது அவருக்கு வயது 30. இவருடன் பயணம் செய்த 19வயது மனைவி ஹாரியத்தும் உடன் மூழ்கி இறந்துபோனார். வாழ்க்கையின் இறுதி நாட்களில் பல அருமையான காதல் கவிதைகளை எழுதிய ஷெல்லியின் உடல் ரோம் நகரிலேயே புதைக்கப்பட்டது.

1824 ஆம் ஆண்டு 36ஆவது வயதில் காலமான பைரனின் கவிதைகள், கடும் விமர்சனத்திற்குள்ளாகியிருந்தாலும் பெருமளவில் இரசிக்கும் வகையில் பிரபலமாகியிருந்தது. 1798 ஆம் ஆண்டிலேயே வேர்ட்ஸ்வொர்த், கொலோரிட்ஜின் உரைநடைக் கவிதைகள் வெளியாகி வாசகர்களிடையே காதல் உணர்வுகளைத் தூண்டியிருந்ததால் பைரனின் படைப்புகள் அவரை உச்சத்திற்கு கொண்டு சென்றன. அழியாத காதல் கவிதைகளை கிரேக்க கிளர்ச்சியாளர்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டுமென்ற இவரது கனவு நிறைவேறுவதற்கு முன்பே விஷ சுரத்தால் இறந்து போனார்.

1791 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி 35 வயதில் தன் பிறந்த ஊரான சாள்ஸ்பேர்க்கில் மரணமடைந்த இசைமேதை மொஸார்ட்டின் நினைவிடத்திற்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் சென்று அஞ்சலி செலுத்திவருகின்றனர். இந்த உலகத்திற்கு ஏராளமான இசைக் குறிப்புகளை விட்டுச்சென்ற அவரது 250ஆவது பிறந்தநாளை இசை உலகமே பிரம்மாண்டமாக கொண்டாடியது. அவரைப் போன்ற இசை மேதை இனி உலகில் பிறப்பது அரிது எனப் புகழ்ந்தது. நான்கு வயதிலேயே நல்ல நினைவாற்றலுடன் இசையமைக்கும் திறமை பெற்றிருந்தாலும் வாழ்க்கையில் அவருக்கிருந்த நீண்டகால பணப் பிரச்சினை, உடல்நலக் குறைவு காரணமாகவே அவர் அகால மரணமடைந்தார். இதைப் பற்றி அவரது மகள் குறிப்பிடுகையில் "உண்மையான குறிக்கோளே அவரது மரணம்" என்றாராம்.

17ஆவது வயதில் "Overture to a midsummer night's dream" என்ற பாடலை இயற்றி இசைமைத்த மென்டல்ஷோன், 1847 ஆம் ஆண்டில் 38ஆவது வயதில் இறந்து போனார்.

வியாபாரத்தில் நஷ்டமேற்பட்டதால் மதபோதகராக மாறி பின்னர் 27வது வயதில் ஓவியராக மாறிய வான்கோ, 37ஆவது வயதில் காலமானபோது சுமார் ஏழாயிரம் ஓவியங்களை இந்த உலகிற்கு விட்டுச்சென்றார். தவறான அபிப்பிராயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட அவர் விரக்தியால் 1890 ஆம் ஆண்டு யூலை 27ஆம் தேதி தன்னைத் தானே சுட்டுக் கொண்டார். ஆனால் இருதினங்கள் கழித்து சகோதரனின் கைகளில் மரணமடைந்தார்.

பிரான்ஸில் வசதியான குடும்பத்தில் பிறந்த ரௌலஸ் லோடெர்க், இவரது சம காலத்தில் வாழ்ந்த ஓவியர்களைப் போலின்றி இவரது ஓவியங்கள் வித்தியாசமாக இருந்தன. பணத் தட்டுப்பாடும் இல்லை. ஆனால் இவரது உடலின் அடிப்பாகத்தில் வளர்ந்த தவறான எலும்பினால் உடல் தோற்றம் அருவருப்பாகவும் ஒழுங்கீனமாகவும் இருந்தது. முறையான அங்கீகாரமும் இல்லை. விகாரமான தோற்றம், அதிர்ஷ்டமின்மை எல்லாம் சேர்ந்து அவரது மனநிலை பாதிக்கப்பட்டது. 1901 ஆம் ஆண்டு 37ஆவது வயதில் அவர் மரணமடைவதற்கு முன் இருமுறை பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார்.

1483ஆம் ஆண்டில் பிறந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மதபோதகர்களில் ஒருவராக கருதப்பட்ட ரா∴பேல் வரைந்த குழந்தை ஏசுவுடன் கூடிய கன்னிமேரி ஓவியம் அவரது திறமைக்கு ஒரு சான்றாகும். 1520ஆம் ஆண்டில் இவர் மரணமடைந்த போது வயது 37.

சரித்திரப் புகழ்பெற்ற பல ஹீரோக்கள் இளம் வயதிலேயே இந்த உலகைவிட்டு மறைந்து விட்டனர். இந்தியாவின் சில பகுதிகளை பிடித்த அலெக்ஸாண்டர் பெர்சியாவுக்கு சென்றடைந்தவுடன் ஓராண்டுகழித்து பாபிலோனில் 33ஆவது வயதில் காலமானார். சிராஜ் உதல்லா பிளாஸி யுத்த களத்தைவிட்டு புறப்படும்போது அவரது படைத் தளபதிகளால் படுகொலை செய்யப்பட்ட போது அவரது வயது 24.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்களில் மிகவும் பிரபலமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர், தன் குருநாதரின் போதனைகளை உலகுக்குப் பரப்ப ராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். அளவுக்கு மீறிய வேலைப் பளுவினால் உடல் நலம் பாதிக்கப்பட்டு அடுத்த பிறந்த நாள் வரை நான் உயிரோடிருப்பது சந்தேகம் என்று தன் சீடர்களிடம் கூறியதைப் போலவே 1902 ஆம் ஆண்டு அவரது 40ஆவது பிறந்தநாளுக்கு ஏழுமாதங்கள் இருக்கும் போதே இறந்து போனார்.

கணிதமேதை ராமானுஜம், மகாகவி பாரதியார் ஆகியோரும் இளம் வயதிலேயே மரணமடைந்தனர்.

சிலுவையில் அறையப்பட்டு ஏசுநாதர் உயிர் துறந்த போது அவரது வயது 33.






ஷெல்லி



பைரன்



மோஸார்ட்



மென்டல்ஷோன்



வான்கோ



ரௌலஸ் லோடெர்க்




ரா∴பேல்



அலெக்ஸாண்டர்




விவேகானந்தர்







# குட்டிக்கால் பூனை



முன்ச்கின் என்ற இந்தப் பூனை பழங் காலத்திலிருந்தே நம்முடன் இருக்கும் பூனை யினத்தைச் சேர்ந்ததல்ல இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதுவகைப் பூனை. இதன் கால்கள் மிகவும் குட்டியாக இருக்கும்.உடல், தலை, நிறம் போன்றவை வழக்கமான பூனை யைப் போன்று இருக்கும். 1980களில் இருந்து அமெரிக்காவில் இவ்வகைப் பூனைகள் தொடர்ந்து வளர்க்கப்பட்டுவருகின்றன.1995இல பன்னாட்டுப் பூனை இனக் குழு இப்பூனைக்கு சில நிபந்தனைகளுடன் அங்கீகாரம் அளித்தது. ஆனால்,1940 களிலேயே இங்கிலாந்திலும், 1956இல் ரஷ்யாவிலும் 1970இல் அமெரிக்காவிலும் ஒரு சில பூனைகள் காணப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

# குட்டிப் பறவை



சிட்டுக்குருவியைப் பார்த்திருக்கிறீர்களா? அது குட்டியாகத்தானே இருக்கும். அதைப் போலவே ஒரு குட்டிப் பறவைதான் இந்த ஹம்மிங்பேர்ட் (humming bird). 3 இலிருந்து 5 அங்குல நீளம் உள்ள இப்பறவை பல வண்ணங்களில் இருக்கும்.

நடுவானில் வினாடிக்கு 12 முதல் 80 தடவை வரை தன் சிறகுகளை அடித்துக் கொண்டே பறக்கும். இப்படி மிக வேகமாக சிறகுகளை அடிப் பதாலேயே அதிலிருந்து ஒரு ஓசை எழுகிறது. அதுவே இப்பறவையின் பெயருக்கு காரணமாகி விட்டது. இப்பறவைகளில் சில பின்னோக்கியும் பறக்குமாம்.

# 50 வயதைத் தொட்ட ஓராங்குட்டான்

உலகின் மிக அதிக வயதான ஓராங் குட்டான் குரங்கு இது. மேற்கு பிரான்சிலுள்ள விலங்குகள் பூங்காவில் கடந்த ஜூலையில் தனது 50 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியது.1962இல் இந்தோனேசியாவில் பிறந்த இது முதலில் ஜேர்மனியில் இருந்தது. தற்போது பிரான்சில் வசிக்கிறதாம்.



# வர்ணம் தீட்டுவோம்



# தொலைபேசி உருவான கதை



தொலைபேசி என்றதும் நம் நினைவில் வரும் பெயர் அலெக்சாண்டர் கிரகாம்பெல். இவரது தந்தை பிறவியிலேயே காது கேட்கும் திறனும் வாய் பேசவும் இயலாதவர். எனினும், உதட்டின் அசைவுகளை வைத்து எப்படிச் சொல்ல வந்த கருத்தை விளக்கலாம் என்று நூல் எழுதிப் புகழ்பெற்ற அலெக்சாண்டர் மெல் வில்பில் என்பவராவார்.கிரகாம் பெல் 1871ஆம் ஆண்டு அமெரிக்காவில் செவிடர் ஊமைப் பள்ளியின் ஆசிரியராகச் சேர்ந்தார். அப்போது செவிட்டுத் தன்மையை நீக்கி ஒலி உணர்வதற்கான சாதனம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். காது கேட்கும் திறனற்றவர்களை செயற்கைக் காதினால் கேட்க வைக்க முடியுமா என்ற உந்துதல் ஏற்பட பிணக்கிடங்கிலிருந்து காதினை அறுத்து ஆராய்ச்சி மேற்கொண்டார்.

தனது உதவிக்காக தோமஸ் வாட்சன் என்பவரை வைத்திருந்தார். போஸ்டன் நகரில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் கம்பி மூலம் ஒலியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.1874ஆம் ஆண்டு கிரகாம்பெல் மாடியில் ஒரு அறையிலும் வாட்சன் கீழே ஒரு அறையிலும் அமர்ந்தனர். இயந்திரம் முன்பிருந்து சில மாற்றங்களைச் செய்தார் பெல். எதிர்பார்த்தபடி இயந்திரம் வேலை செய்யவில்லை. எனவே, வெறுப்பில் கோபத்தில் எழுந்தார். அருகிலிருந்த அமிலக் குடுவை கீழே சாய்ந்து அவரது உடையில் கொட்டியது. உடனே, உதவிக்கு வரும்படி வாட்சனை உரக்கக் கத்தி அழைத்தார்.

பெல் அழைத்தது கீழே அறையிலிருந்த வாட்சனுக்குக் கேட்டது. காரணம், டிரான்மிஷன் என்னும் இயந்திரத்தின் முன் நின்று பெல் கத்தினார். இவ்வளவு விரைவில் ஆராய்ச்சியின் பயன் கிடைத்ததை எண்ணி வாட்சனும் பெல்லும் மகிழ்ந்தனர்.மக்களிடம் தங்கள் கண்டுபிடிப்பை எடுத்துக்கூறியபோது யாரும் நம்பவில்லை. பின்பு பிலடெல்பியாவில் ஆய்வு செய்து காட்டினர். விக்டோரியா மகாராணியார் முன்பு செயல்படுத்திக் காட்டினர். பலர் தொலைபேசியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எனவே, பேடண்ட் உரிமைக்காக பெல் போராட வேண்டியிருந்தது. பல ஆராய்ச்சிகளுக்குப்பின் தொலைப்பேசியை அறிமுகப்படுத்தினார். அப்போது தொலைப்பேசி வசதி வேண்டி விண்ணப் பித்தோர் 8 பேர்களே. 1922இல் பெல் இறந்தபோது அமெரிக்கர்கள் தொலைப் பேசிகளை ஒரு நிமிடம் இயங்காமல் வைத்து அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

# உலகின் மிகக் குள்ள மனிதர்




இவர்தான் உலகிலேயே மிகவும் உயரம் குறைவானவர் என்று கின்னஸ் உலக சாதனைப் பதிவு நிறுவனம் கூறுகிறது. 18 வயதாகும் ஜன்ரே பலாமின் என்ன இந்த மனிதர் தெற்கு





பிலிப்பைன்சைச் சேர்ந்தவர் .23.6 அங்குலம் (60 சென்ரி மீற்றர்) உயரம் உள்ள இவரது உடல் வளர்ச்சி ஒரு வயதிலேயே நின்றுவிட்டதாம். இவரைவிட 3 அங்குலம் உயரம் அதிகமான நேபாளத்தைச் சேர்ந்த காகேந்த்ரா தாபர் மிகர் என்பவர்தான் இதுவரை உலகின் மிகக்குறைந்த உயரமானவராக இருந்தார். இப்போது ஜன்ரே பாலாவின் அந்த இடத்தைப்பிடித்துவிட்டார்.

# பூநகரி, பளை சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள்



(முழங்காவில்)

பூநகரி மற்றும் பளை பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உதவிப்பொருட்களை வழங்கி வைத்தார்.

பூநகரி பிரதேசத்தில் 02 இலட்சத்து 31 ஆயிரத்து 500ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இரண்டு தச்சு வேலை பயனாளிகளுக்கு மின் பிறப்பாக்கி இயந்திரமும், மூன்று தையல் இயந்திரங்களும்,மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்களுமாக எட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புகைத்தலுக்கு எதிரான கொடிவாரத்தில் சேகரிக்கப்பட்ட நிதியி லிருந்து 34 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு. தெரிவு செய்யப்பட்ட நான்கு சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களுக்கு தலா 75000ரூபா வீதம் வீடு புனரமைப்பிற்கான பணமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரும் பூநகரி பதில் பிரதேச செயலாளருமான சத்தியசீலன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன்,வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி ஆனந்தி ஜெயரட்ணம்,பளை பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் அருள்செல்வன், பூநகரி உதவித் திட்டப்பணிப்பாளர் சொர்க்கநாதன்,பிரதேச செயலக கணக்காளர் செல்விராதை,நிர்வாக அலுவலர் திருமதி சயந்தினி பிரதேச சபை செயலாளர் சிவப்பிரகாசம் விளையாட்டு உத்தியோகத்தர் ஜெயகுமார் சமூகசேவையாளர் தர்மலிங்கம்,கிராமசேவையாளர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (29,112)


## ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2014 ஆசிரியர் கலாசாலைகளில் இரண்டு வருட கால ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது. அரசாங்க பாடசாலைகளில் மூன்று வருட கால ஆசிரியர் சேவையை நிறைவு செய்தவர்களும் தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களில் ஒருவருட சேவையை பூர்த்தி செய்தவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் .

கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டகலை உள்ளிட்ட நான்கு தமிழ்மொழி மூல ஆசிரியர் கலாசாலைகள் ,உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள ஒன்பது ஆசிரிய கலாசாலைகளுக்கும் பயிற்சிக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கோரப்பட்ட விண்ணப்ப நிபந்தனைக்கு அமைய விண்ணப்பித்து தகைமை பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## பட்டிமன்ற நிகழ்வு



பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தின் திருவெண்பாவைச் சபையின் கலைவிழா நிகழ்வில் அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தினரின் சிறப்புப்பட்டிமன்ற நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பட்டிமன்றமானது இன்றைய சமூகத்தில் தமிழர்களுடைய பண்பாட்டினை பேணிப் பாதுகாப்பதில் எடுக்கின்ற அக்கறை போதுமானது, போதுமானதல்ல என்னும் தலைப்பில் இடம் பெற்றது. பட்டிமன்றத்தின் நடுவராக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா செயற்பட்டார்

தமிழர்களுடைய பண்பாட்டினை பேணிப்பாதுகாப்பதில் எடுக்கின்ற அக்கறை போதுமானது என்னும் தலைப்பின் தலைமைப் பேச்சாளராக யாழ்ப்பாணம்பல்லகலைக்கழக மருத்துவ பீட பதிவாளர் இ.சர்வேஸ்வரா இணைப்பேச்சாளர்களாக ஆசிரியர் ம.பிரதீபன் ஆசிரியர் விஜியராஜ் ஆகியோரும் தமிழர்களுடை பண்பாட்டினை பேணிப்பாதுகாப்பதில் எடுக்கின்ற அக்கறை போதுமானதல்ல அணியின் தலைமைப்பேச்சாளராக ஆசிரியர் கவிஞர் கை.சரவணன் இணைப் பேச்சாளர்களாக யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் யாழ் மாவட்டசெயலக புனர்வாழ்வு உத்தியோகத்தர் கு.கோபிராஜ் ஆகியோரும் வாதிட்டார்கள்.





காரைநகர் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே. தர்மரத்தினம் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (50)

# பதிவிறக்கப் பெட்டகம்

பின்னணி இசை என்பது, காட்சிகளின் தாக்கத்தை அதிகப்படுத்தி அதை அப்படியே பார்வையாளனின் மனதில் இருக்க செய்வதுதானே தவிர, காட்சிகளுக்கு பின்னால் ஒலித்துக் கொண்டிருக்கும் சப்தங்கள் அல்ல பின்னணி இசை. லைப் இஸ் பியூடிபுல், ஷஷான்க் ரெடேம்சன், ஷிண்ட்லெர் லிஸ்ட் போன்ற படங்களின் பின்னணி இசையை ஒரு முறைக் கேட்டுப் பாருங்கள். ஒரு படத்தை பார்த்துவிட்டு, பிறகு தனியாக அதன் பின்னணி இசையைக் கேட்கும்போது, அந்தப் பின்னணி இசைக்குரிய காட்சிகளும் உங்கள் மனதில் ஓடும். அதுதான் ஒரு சிறந்த பின்னணி இசை செய்யும் மாயாஜாலம். திரையில் தோன்றும் கதாபாத்திரத்தின் மனநிலையை, தனி இருக்கையில் உட்கார்ந்துக் கொண்டு பார்க்கும் பார்வையாளனின் மனதில் பதியவைப்பதில் பின்னணி இசைக்கும் மிக பெரிய பங்கிருக்கிறது.

அன் அக்கரன்ஸ் அட் ஒல் க்ரீக் பிரிட்ஜ் என்கிற குறும்படத்தை பாருங்கள். பின்னர் அதன் பின்னணி இசையை தனியாக ஒரு முறை கேளுங்கள். ஒரு மரண தண்டனை தப்பித்து, நீருக்குள் மூழ்கி தனது கைக்கட்டை அவிழ்க்க முயற்சிக்கும்போது அவனுக்கு ஏற்படும் அதே மூச்சுத்திணறல் எதிரில் இருக்கும் பார்வையாளனுக்கும் ஏற்புடும். காட்சியின் வலிமையை, அந்த காட்சி ஏற்படுத்த வேண்டிய தாக்கத்தை, அதன் அர்த்தம் மாறாமல் பார்வையாளனுக்கு கடத்துவதே பின்னணி இசை. **– அருண்**

வாசிப்பதும் எழுதுவதும் தனிமையில் நிகழ்ந்தாலும், தனிமையிலிருந்து மீண்டு சமூகத்துக்குள் நுழையும் செயல்களாகவே இருக்கின்றன. எந்தவொரு கலைஅனுபவமும் இத்தன்மையானதுதான். அதுபோன்றே, பழைய திரைப்படப் பாடல்கள் தனிமையின் சுவர்களிலிருந்து என்னை வெளியேற்றி சமூகவெளிக்கு அழைத்துச் செல்கின்றன. நம் நினைவுகளின் சேகரநதியில் ஒரு கல்லென பழைய பாடல்கள் உள்ளிறங்குகின்றன. அவை, குமிழிகளையும் வளையங்களையும் மேல்மட்டத்தில் உருவாக்கியபடி இறங்குகின்றன. நம் வாழ்வின் காலத்தைக் கலைத்துப்போட்டு, நினைவுகளின் தீரா நதியோட்டத்தில் நம்மை முக்குளிக்கவும் நீந்தவும் செய்யும் பொக்கிஷமாகத்தான் பழைய பாடல் நமக்கிருக்கின்றது. நீராடுவதற்கான ஒரு நதியாக அது என்னுள் சலனித்துக்கொண்டிருக்கிறது.– **சி.மோகன்**

சிறுவயது 'ஒலியும் ஒளியும்' களில் எம்.ஜி.ஆர் பாடல்கள் வந்தாலே எங்களுக்கு குஷியாகி விடும். அப்போது சிவாஜி தான் எங்களுக்கு பிடித்தமானவர் என்பதால், எம்.ஜி.ஆரை கிண்டலடிப்பதை ஒரு முழு நேர வேலையாகவே செய்து வந்தோம். பாடல்களில் எம்ஜிஆர் எத்தனை முறை கைகளைத் தூக்குகிறார் என்று எண்ணிப் பார்ப்பது சுவாரசியமான பொழுதுபோக்கு. 'புதிய வானம் புதிய பூமி' பாடலில் அவர் 137 முறை கைகளைத் தூக்கியிருக்கிறார் என்று பொறுமையாக எண்ணி அறிவித்து சாதனை படைத்த சுடலைமுத்து அடுத்து வந்து கணக்குத் தேர்வில் தோற்றுப் போனது காவிய சோகம். இப்படி எம்ஜிஆர் கைகளைத் தூக்கி காட்டி ஆடுவதற்கு ஏற்றதாகவே பாடலாசிரியர்களும் உழைத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இந்தப் பாடலை சமீபத்தில் கேட்ட போது எம்.ஜி ஆர் இப்படி நடித்திருப்பாரோ என்று கற்பனித்துப் பார்த்தேன்.

'அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்' (எம்.ஜி.ஆர் வலது கையைத் தூக்கி மேலே காட்டுகிறார்)

'இதோ இந்த அலைகள் போல ஆட வேண்டும்' (இடது கையை இறக்கி கீழே காட்டுகிறார்)

ஆனால் பாடல் காட்சியைப் பார்த்த போது ஏமாற்றமாக இருந்தது. அவர் அவ்வாறு செய்யவில்லை. பக்கத்தில் பிரகர்சமாக ஜெயலலிதா இருந்ததுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். **– சுரேஷ் கண்ணன்**

அந்தக் காலகட்ட தமிழ் சினிமாவின் எழுதப்படாத விதி. இரு திலகங்களில் யாராவது ஒருவருடன் தான் நாயகியர் தொடர்ந்து நடிக்க வேண்டும். அணி மாறுவது அவ்வளவு சுலபமல்ல. அநேகமான சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆர். நாயகிகள், அவரால் கைவிடப் பட்டவுடன் சிவாஜி அணிக்கு மாறுவது வழக்கம். இது சரோஜா தேவிக்கு அறுபதுகளின் இறுதியிலும், ஜெயலலிதாவுக்கு எழுபதுகளின் நடுவிலும் நிகழ்ந்தது. **– வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்**

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## வசந்தகுமார் ஷந்தனா

**வேம்படி மகளிர் கல்லூரி**
**உயிரியற் பிரிவு -2AB**
**மாவட்ட நிலை : 07**
**தேசிய நிலை: 117**



அதிக நேரம் கற்கத் தேவையில்லை. அவதானத்துடன் கற்றால் பாடத்தை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளையும் (சா/த) பரீட்சையில் 8ஏ,எஸ் பெறுபேற்றைப் பெற்றேன். நான் இப்பெறுபேற்றை பெறுவதற்கு பாடசாலைக் கல்வியும், தனியார் கல்வி நிலைய கல்வியுமே பேருதவியாக இருந்தது.

நான் இப்பெறுபேற்றைப் பெற்றதை யிட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

## ஜெகதீஸ்வரன் கேதாரணி

**வேம்படி மகளிர் கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு -3A**
**மாவட்ட நிலை : 03**
**தேசிய நிலை: 529**



கற்றலுக்கு முக்கியத்துவம் அளித்து கற்கவேண்டும். அப்போதுதான் வெற்றிக்கான இலக்கை அடைய முடியும்.

நான் க.பொ.த (சா/த) பரீட்சையில் 8ஏ,சி பெறுபேற்றை பெற்றேன். நான் அதிகாலையில் எழுந்து படிப்பேன். அதிகாலையில் படிப்பது ஞாபகத்தில் இருக்கும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோரின் அயராத ஊக்கமும் ஒத்துழைப்புமே நான் இப்பெறுபேற்றைப் பெற்றமைக்கு காரணமாகும் அந்த வகையில் அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்

**தொகுப்பு : கணா நாதன்**



வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் நிறைவு நாள் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி வலி.மேற்கு அமைப்பாளருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) கலைஞர் ஒருவரை கௌரவிப் பதைக் காணலாம். (48

# மதுபேதையில் வாகனம் செலுத்திய 1556 சாரதிகள் சிக்கினர்

பொலிஸாரின் ஆறு நாள் தேடுதல் வேட்டையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 1556 சாரதிகள் சிக்கினர்.

நாடு முழுவதும் நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று காலை 6 மணி வரை பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 01 பஸ் சாரதி, 151 மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள், 70 முச்சக்கர வண்டி சாரதிகள், வேறு வாகன சாரதிகள் 29 பேர் என மொத்தம் 251 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி மாலை முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலத்தில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 1556 சாரதிகள் கை[illegible] செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆலயங்களுக்கு யுத்த காலத்திலும் உதவியவர் அமைச்சர் டக்ளஸ்

## இந்து கலாசார உத்தியோகத்தர்



(கிளிநொச்சி)

மக்களது மதவழிபாட்டு அனுஷ்டானங்கள் பாதிப்படையக்கூடாதென்ற உயரிய நோக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் கூட அரச கட்டுப்பாடற்ற இப் பகுதிகளுக்கு எங்களை அனுப்பி ஆலயங்கள் தொடர்பாக அறிக்கையை பெற்று அவற்றுக்கு நிதியுதவிகளை வழங்கியவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் மோகனகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடந்த கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட 31 இந்து ஆலயங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில அரச அதிபர் வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இந்து கலாசார உத்தியோகத்தர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு பொறுப்பாக இருந்தபோது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுமார் 200 இறகும் மேற்பட்ட இந்து ஆலயங்களுக்கு நிதியுதவிகளை வழங்கியிருந்தார். சிறிய ஆலயங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாவும், பெரிய ஆலயங்களுக்கு 5 - 6 இலட்சம் ரூபாவும் அவரால வழங்கப்பட்டது.


யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தப் பகுதிகளுக்கு எங்களை மிகவும் தைரியமாக அனுப்பிவைத்து இங்குள்ள ஆலயங்களின் விபரங்களை திரட்டி அதனடிப்டையில் அவ் ஆலயங்களின் அறங்காவலர்களை கொழும்புக்கு அழைத்து பாதுகாப்பு கெடுபிடி மிகவும் மோசமாக இருந்த காலகட்டத்தில் கூட நிதியுதவிகளை அவர் வழங்கினார் என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நான் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையினை உடையவன். அந்த வகையிலும் ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரை ஒடுக்குவதை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மேலதிக அரச அதிபர் மோகனதாஸ், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் மற்றும் ஆலயங்களின் பரிபாலன சபையினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வயோதிப கணவரின் ஆசை எனக் கூறி

# சொத்து மோசடி செய்த 27 வயது மனைவி கைது



(கொழும்பு)

வயோதிப கணவரின் கடைசி ஆசையென சொத்து மோசடி செய்ய முயன்ற 27 வயது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

52 வயது கணவரின் சொத்துக்களை போலி ஆவணங்கள் மூலம் தனதாக்கிக்கொள்ள முயன்ற 27 வயதுடைய இளம் விதவையொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

கணவரின் இறுதி விருப்பம் என்ற பெயரில் பல கோடி ரூபா பெறுமதியான வீடு, காணி மற்றும் பணம் போன்றவற்றை தன் பெயருக்கு மாற்றும் நோக்கில் இந்தப் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த மோசடி நடவடிக்கைக்கு கொழும்பிலுள்ள பிரபல விகாரையொன்றின் விகாராதிபதியான தேரர் ஒருவரும் குறித்த பெண்ணின் தாயாருமே உதவி புரிந்துள்ளனர். இதனால், அவ்விருவரையும் மற்றும் போலி ஆவணங்களைத தயாரித்த வழக்கறிஞர் ஒருவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தனது 57 வயதுடைய சகோதரர் உயிரிழந்ததன் பின்னர் சொத்துக்களை 27 வயதுடைய அவரது இரண்டாவது மனைவி, இறுதி விருப்பம் என்ற போலி ஆவணத்தின் மூலம் உரிமை கொண்டாட நடவடிக்கை எடுத்துள்ளார் என உயிரிழந்த நபரின் சகோதரர் ஒருவர் கடவத்தை, மஹர பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பிலுள்ள மாடி வீடொன்று, வேயங்கொடையில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் இரண்டு, 50 இலட்சம் ரூபா முதலீடு மற்றும் பங்குச் சந்தையிலுள்ள 5 இலட்சம் ரூபா பணம் ஆகியவற்றையே குறித்த பெண் மோசடி செய்ய முற்பட்டுள்ளார்.

# மூலிகை போதை கடத்தியவர் சிக்கினார்

(கொழும்பு)

கென்யாவில் இருந்து இலங்கைக்கு மூலிகை போதை கடத்தி வந்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறிதத நபர் கைது செய்யப் பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவரிடம் இருந்து 50 கிலோ கிராம் மூலிகை போதை (மாயவ) மீட்கப்பட்டுள்ளது. குறித்த மூலிகை போதை முதல் முறையாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த மூலிகை போதை ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட இடங்களில் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆபிரிக்காவில் அது கிடைக்கப்பெறும் எனவும் சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர் கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் என தெரியவந்துள்ளது.

# மழை வேண்டி பிரார்த்தனை

(மட்டக்களப்பு)

கிண்ணியா பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களில் மழை வேண்டி பிரார்த்தனைகள் இடம் பெற்று வருகின்றன. கிண்ணியா ஜம்இய்யத்துல் உலாமாவின் பணிப்புரைக்கமையவே இந்தப் பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன.

கிண்ணியாப் பிரதேசத்தில் தற்போது கடும் வறட்சி நிலவுகின்றது. இதனால் நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்தே மழை வேண்டி பிரார்த்தனையில் ஈடுபடுமாறு கிண்ணியா ஜம்இய்யத்துல் உலாமா அறிவித்துள்ளது. இதேவேளை, மழை வேண்டி முல்லைத்தீவு, ஷிஜ்ராபுரம் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மழை வேண்டித் தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## இரசாயனவியல்

**விரிவியல்பு (Extensive Properties)**

தொகுதியின் அளவில் தங்கியுள்ள இயல்பு விரிவியல்பு எனப்படும்.
உதாரணம்: கனவளவு, வெப்ப உள்ளுறை, திணிவு, வெப்பக் கொள்ளளவு

**செறிவியல்பு (Intensive Properties)**

தொகுதியின் அளவில் தங்கியிராத இயல்புகள் செறிவியல்பு எனப்படும்.
உதாரணம் : வெப்பநிலை, செறிவு, அமுக்கம், அடர்த்தி, பிசுக்குமை, மூலர் கனவளவு, மூலர் வெப்பக் கொள்ளளவு, தன்வெப்பக் கொள்ளளவு.

**இரசாயனச் சமன்பாடுகளைச் சமப்படுத்தல்**

மூன்று முறைகள் உள்ளன.

1. கண்டறிதல் முறை (Inspection method)
2. கணிதமுறை (Mathematical method)
3. ஒட்சியேற்ற / தாழ்த்தல்முறை (Oxideation & Reduction Method)

**கணிதமுறை**

தாக்கிகளையும் விளைவுகளையும் அறிந்துள்ள பொதுப்பெருக்கங்களை ஒப்பிடும் முறையின் மூலம் சமன்பாட்டைச் சமப்படுத்தல் கணிதமுறை எனப்படும்.
உதாரணம்: $aCu + b HNO_3 \quad cCu(NO_3)_2 + d NO + eH_2O$

Cu அணுக்களைக் கருதுவோமாயின் $a = c$
H அணுக்களைக் கருதுவோமாயின் $b = 2e$
N அணுக்களைக் கருதுவோமாயின் $b = 2c + d$
O அணுக்களைக் கருதுவோமாயின் $3 b = 6c + d + e$

a=1 ஆயின் c =1 அதனைப் பிரதியிடும்போது

$b = 2 + d$ ——— (1)
$3b = 6 + d + e$ ——— (2)
$b = 2e$ ஐ பிரதியின்போது
$2e = 2 + d$
$6e = 6 + d + e$
$2e - d = 2$ ——— (3)
$5e - d = 6$ ——— (4)
$3e = 4$
$e = 4/3$
$b = 2 \times 4/3 = 8/3 \quad d = b-2$
$= 8/3 - 2$
$= 2/3$

$Cu + 8/3\ HNO_3 \rightarrow Cu(NO_3)_2 + 2/3NO + 4/3\ H_2O$
3 ஆல்பெருக்கும் போது
$3Cu + 8HNO_3 \quad 3Cu(NO_3)_2 + 2NO + 4\ H_2O$

**திணிவுப் பின்னம்**

A, B ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலவையில் A யின் திணிவுப் பின்னம்

$$= \frac{\text{A யின் திணிவு}}{\text{A யின் திணிவு} + \text{B யின் திணிவு}}$$

உதாரணம் : Zn, Mg, Cu அடங்கும் கலப்புலோகமொன்றின் 5.0g இல் 1.00g mg அடங்கியுள்ளது. mg இன் திணிவுப் பின்னத்தைத் துணிக.

mg இன் திணிவுப் பின்னம் $= \frac{1.00g}{5.00g} = \frac{1}{5}$

**கனவளவுப் பின்னம்**

A,B ஆகியவற்றைக் கொண்ட கலவையில் A யின் கனவளவுப் பின்னம்

$$= \frac{\text{A யின் கனவளவு}}{\text{A, B கலவையின் மொத்தக் கனவளவு}}$$

உதாரணம்: $20.00cm^3\ C_2H_5OH$ இற்கு மொத்தக் கனவளவு $100cm^3$ ஆகும். வரை நீர் சேர்க்கப்படுகின்றது. $C_2H_5OH$ இன் கனவளவுப் பின்னர் யாது?

$C_2H_5OH$ இன் கனவளவு பின்னம் $= \frac{20.00cm^3}{100cm^3}$
$= 1/5$

**பதார்த்த அளவு பின்னம் (மூல் பின்னம்)**

A, B ஆகியவற்றைக் கொண்ட கலவையில் A யின் பதார்த்த அளவு பின்னம்

$$= \frac{\text{A யினது பதார்த்த அளவு}}{\text{மொத்த பதார்த்த அளவு}}$$

உதாரணம்: 5 mol KCI, 3 mol NaOH உடன் கலந்துள்ள தொகுதியில் KCI இன் பதார்த்த அளவு பின்னம் யாது?

KCI இன் பதார்த்த அளவு பின்னம் $= \frac{5\ mol}{8\ mol}$
$= \frac{5}{8}$

**pph, ppt, ppm, ppb**

தரப்பட்ட திணிவு, கனவளவு, மூல் பின்னங்களை நூறின், ஆயிரத்தின், மில்லியனின், பில்லியனின் பகுதிகளைக் குறிப்பிடப்படுதல் முறையே pph, ppt, ppm, ppb எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| pph $10^2$ | ppt $10^3$ | ppm$10^6$ (mg $dm^{-3}$) | pph $10^9$ ($\mu g\ dm^{-3}$) |

உதாரணம் :
1. 20.000g நீர் கரைசலில் 0.020g A எனும் திரவியம் அடங்கியுள்ளது.

i) திரவியம் A இன் திணிவுப் பின்னம் யாது?

$\frac{0.020\ g}{20.000g} = \frac{1}{1000}$

ii) இதன் பெறுமானத்தினை pph, ppt, ppm, ppb ஆகியவற்றில் தருக

pph இல் $\rightarrow 1/1000 \times 100 = 0.1$ pph
ppt இல் $\rightarrow 1/1000 \times 1000 = 1$ ppt
ppm இல் $= 1/1000 \times 10^6 = 10^3$ ppm
ppb இல் $= 1/1000 \times 10^9 = 10^6$ ppb

2) 20.0g நீர்க்கரைசலொன்றின் 40 mg கரையம் A காணப்படுகின்றது.

1) A இன் திணிவுப் பின்னத்தைக் காண்க.
2) மேலுள்ள பெறுமானத்தை
i. PPh ii) PPt iii) PPm iv) PPb என்பவற்றில் தருக.

**Answer**

1) A இன் திணிவுப் பின்னம் $= \frac{40 \times 10^{-3} g}{20g}$

2)
i) pph இல் $= 2 \times 10^{-3} \times 100 = 2.0 \times 10^{-1}$
ii) ppt இல் $= 2 \times 10^{-3} \times 1000 = 2$
iii) ppm இல் $= 2 \times 10^{-3} \times 10^6 = 2.0 \times 10^3$
iv) ppb இல் $= 2 \times 10^{-3} \times 10^9 = 2.0 \times 10^6$

### 2.1 பொருளுடைய இலக்கம்

2.11 பின்வருவனவற்றில் உள்ள பொருளுடைய இலக்கங்களின் எண்ணிக்கையினைத் தருக?

a) 73.000g b) 0.0503 kg
c) 6.300cm d) 0.80090m
e) $5.10 \times 10^{-7}$m f) 2.0001 s

2.12 பின்வருவனவற்றில் உள்ள பொருளுடைய இலக்கங்களின் எண்ணிக்கையைத் தருக.

a) 130.0kg b) 0.07389
c) 0.224800m d) 1008 S
E) $4.380 \times 10^{-8}$M f) $9.100 \times 10^4$ cm

2.13 கீழ்வரும் கணித்தல்களுக்கான விடையினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக

a) $\frac{2.568 \times 5.8}{4.186}$ b) 5.41 - 0.398
c) 3.38 - 3.01 b) 4.18 - 58.16 x (3.38 - 3.01)

2.14 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக.

a) $\frac{5.61 \times 7.891}{9.1}$ b) 8.91 - 6.435
c) 6.81 - 6.736 d) 38.91 x (6.81 - 6.730)

2.15 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக?

a) $\frac{8.71 \times 0.0301}{0.056}$ b) 0.71 + 81.8

c) 934 x 0.00435 + 107 d) (847.89 - 847.73) x 14673

2.16 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக.

a) $\frac{0.871 \times 0.23}{5.871}$

b) 8.937 - 8.930

c) 8.937 - 8.930

d) 0.00015 x 54.6 + 1.002

2.17) பூமியின் சுற்றளவு 40, 000km ஆகும். இப்பெறுமானம் திட்டமாக 2 பொருளுடைய இலக்கங்கள் கொண்டது. இதனை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதிக்காட்டுக.

2.18) பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான சராசரித் தூரம் 150,000.000 km என வானியலாளர்கள் கூறுகின்றனர். இப்பெறுமானம் திட்டமாக 3 பொருளுடைய இலக்கங்களைக் கொண்டது. இதனை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதிக்காட்டுக.

2.19) இரண்டு கோளங்களில் ஒரு கோளத்தின் ஆரை 5.10 cm மற்றையதன் ஆரை 5.00 cm இரண்டு கோளங்களுக்குமிடையிலான கனவளவு வித்தியாசத்தினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதுக. (கோளத்தின் கனவளவு 4/3 $\pi r^3$, $\pi$ = 3.1416 r - ஆரை)

2.10) திண்ம உருளை ஒன்றின் குறுக்குவெட்டு ஆரை 1.500 cm ஆகும். இவ் உருளையின் 3.10 cm உயரத்திற்கும் இடையிலான கனவளவுப் பெறுமானத்தினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக. (உருளையின் கனவளவு $\pi r^2 l$, $\pi$ = 3.1416, r - ஆரை l= நீளம்)

2.11) கீழ்வரும் அளவீடுகளைப் பொருத்தமான SI முன்னொட்டுக்களுடன் எழுதுக.
a) $5.89 \times 10^{-12}$s b) $2.130 \times 10^{-9}$ m
c) 0.00721g d) $6.05 \times 10^{3}$ m

2.12) கீழ்வரும் அளவீடுகளைப் பொருத்தமான SI முன்னொட்டுக்களுடன் எழுதுக
a) $4.851 \times 10^{-6}$ g b) $3.16 \times 10^{-2}$ mg
c) $2.591 \times 10^{-9}$ g d) $8.93 \times 10^{-12}$ g

2.13) விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டைப் பயன்படுத்தி மாற்றுக.
a) 6.15 ps to s b) 3.781 μm to m
c) 1.546 $A^0$ to m d) 9.7 mg to g

2.14) விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டைப் பயன்படுத்தி மாற்றுக.
a) 8.55 km to m b) 1.98 ms to s
c) 2.54. cm to m d) 6.923 mg to g

## ஏற்ற அடர்த்தி (Charge Density)

1 $dm^3$ கனவளவில் உள்ள ஏற்றத்தின் அளவு (C இல்) ஏற்ற அடர்த்தி எனப்படும்

$$\text{ஏற்ற அடர்த்தி} = \frac{\text{ஏற்றம் (C)}}{\text{கனவளவு (dm3)}}$$

உதாரணம் : அயன்செறிவு 1 mol $dm^{-3}$ ஆகவுள்ள 1 mol $dm^{-3}$ $Fe^{3+}$ கரைசலின் ஏற்ற அடர்த்தியைக் காண்க.

1 mol நேர் (+) ஏற்றத்தின் அளவு = + $1.602 \times 10^{-19}$ C
x $6.022 \times 10^{23}$ C
= 1F (96485 C)

$$\text{ஏற்றத்தின் அடர்த்தி} = \frac{3\ F}{1\ dm^3}$$
$$= \frac{3 \times 96485\ C}{1\ dm^3}$$
$$= 289455\ C\ dm^{-3}$$

கனவளவிற்குப் பதிலாக திணிவும் பயன்படுத்தப்படலாம் திணிவு பயன்படுத்தின்

$$\text{ஏற்ற அடர்த்தி} = \frac{3\ F}{1\ kg}$$
$$= 289455\ C\ kg^{-1}$$

1) உப்பு $Fe_2(SO_4)_3$ நீரில் முற்றாகக் கரைகின்றது. இதனது நீர்க்கரைசலொன்றில் $SO_4^{2-}$ இன் அமைப்பு 28.8 ppm ஆகக் காணப்பட்டது.

(S =32, O = -16, Fe =56)

1) கரைசலின் $Fe^{3+}$ இன் செறிவை mol $dm^{-3}$ இல் காண்க

2) மேற்குறிப்பிட்ட கரைசலில் $Fe^{3+}$ அயனின் நேரேற்ற அடர்த்தியைக் கணிக்க ($Cdm^{-3}$ இல்)

**Answer**

1) $Fe_2(SO_4)_3 \rightarrow 2\,Fe^{3+}(aq) + 3\,SO_4^{2-}$
கரைசலில் $SO_4^{2-}$ இனது அமைப்பு = 28.8 ppm
28.8 ppm = $\frac{28.8 \times 10^{-3}\ gdm^{-3}}{96g\ mol^{-1}}$

3 X 10 mol dm

$SO_4^{2-} : Fe^{3+} = 3 : 2$

$\{Fe^{3+}_{(aq)}\} = 2 \times 10^{-4}$ mol $dm^{-3}$

2) நேரேற்ற அடர்த்தி = $2 \times 10^{-4} \times 96485\ Cdm^{-3}$
= 19.2970 $Cdm^{-3}$

**Ans 4**

பின்வரும் சக்திச் சொட்டெண் தொகுதிகளில் 4 f ஒபிற்றலிலுள்ள இலத்திரனொன்றுக்குப் பொருத்தக்கூடியது

| | | | |
|---|---|---|---|
| 1) n = 4, | $l$=3, | $m_l$ = +2 | $m_s$ = -1/2 |
| 2) n = 4, | $l$=3, | $m_l$ = +4 | $m_s$ = +1/2 |
| 3) n = 4 | $l$=2, | $m_l$ = -2 | $m_s$ = -1/2 |
| 4) n = 3 | $l$=2, | $m_l$ = -1 | $m_s$ = +1/2 |
| 5) n = 3 | $l$=2 | $m_l$ = -2 | $m_s$ = -1/2 |

**Ans 1**

**தப்பல் வேகம் (Escape Valocity)**

பொருள் ஒன்றை புவியின் ஈர்ப்பிலிருந்து முற்றாக விடுபட்டு விண்வெளிக்கு உட்புக புவி மேற்பரப்பிலிருந்து எறிய வேண்டிய குறைந்தளவு வேகம் அதன் தப்பல் வேகம் எனப்படும்.

வாயு துணிக்கைகளின் இடைவேகம், புவியின் தப்பல் வேகத்திலும் கூடுமாயின் அது புவியின் வளிமண்டலத்திலிருந்து வெளியேறும்.


♦ ஐதரசன், ஈலியம் போன்ற பாரமற்ற வாயுக்களின் இடைவேகம் புவியின் தப்பல் வேகத்திலும் மிகக்கூடுதலானதாகையால் அவை புவியின் வளிமண்டலத்திலிருந்து வெளியேறியுள்ளன.

**பரவல்**

யாதாயினும் ஒரு வகை மூலக்கூறுகள், வேறோர் வகை மூலக்கூறுகள் அடங்கும் வெளியெங்கும் வியாபித்தல் பரவல் எனப்படும்.

பரவல் வேகம் திண்மம் < திரவம் < வாயு

வெவ்வேறு வாயுக்கள் வெவ்வேறு வேக வீதங்களில் பரவுமென பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அமோனியா, ஐதரோகுளோரிக்கமில மூலக்கூறுகள் வளியினூடாகப் பரவி $NH_4Cl$ உருவாகும் விதம் பின்வரும் அமைப்பில் காட்டப்பட்டுள்ளது. HCl தோய்க்கப்பட்ட பஞ்சிற்கு அண்மையில் வெண்புகை தோன்றும்.




♦ சார் மூலக்கூற்று திணிவு குறைவான அமோனியா மூலக்கூறுகளின் பரவல் வேகவீதம் ஐதரோகுளோரிக்கமிலத்திலும் அதிகமானது என இதிலிருந்து தெளிவாகிறது.

♦ எனவே சார்மூலக்கூற்றுத் திணிவு குறைந்த மூலக்கூறுகளின் பரவல் வேகம் உயர்வானதாகும்.

♦ பரவல் வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
பரப்பளவு
செறிவுப் படித்திறன்
வெப்பநிலை
சார் மூலக்கூற்றுப் பருமன்

(தொடரும்...)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/ பெயர்மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர்மொழியப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி-புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னதநிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தர் நிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் ஏழு பீடங்களையும் வவுனியாவில் அமைந்த வளாகத்துடன் அமைந்த இரு பீடங்களையும் கொண்டமைந்து ஏறத்தாழ ஐயாயிரம் பட்டதாரி மாணவர்களையும் 600 உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கிவருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித்துணை புரியுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வல்லமை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர் கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மேம்பாடு உள்ளடங்கலாக கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்ளைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி/ பெயாமொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர்நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 10% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

விண்ணப்பங்கள்/ பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமைவிபரப் பட்டியல்.
2. விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம். தற்போது பதவி வகிப்பவர் விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய (முதலாவது) பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
3. பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.
4. விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் பெயர் மொழிவுகள் பேரவைச் செயலாளர், பதிவாளர் செயலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 12.02.2014 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்

பதிவாளர் செயலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
30.12.2013

(C/3260)

# இணையத் தளங்கள் பார்வை

## வடக்கு, கிழக்கில் அதிகரிப்பு

இணையத்தளங்களை அதிகம் பார்வையிடுவோர் வடக்கு கிழக்கு மக்கள் என புள்ளி விபரக் கோவைகள் தெரிவிக் கின்றன.

இலங்கையில் 11.4 வீதமான வீடுகளில் இணையத்தள வசதிகள் இருப்பதாகவும் 9.2 வீதமானவர்கள் இணையத்தள வசதிகளை வழங்கும் நிலையங்களில் அவற்றை பயன்படுத்துவதாகவும் புதிய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புதிய ஆய்வறிக்கையின் படி கொழும்பு மாவட்டத்தில் அதிகளவில் இணையத்தளம் பயன்படுத்தப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் 26.9 வீதமான வீடுகளில் இணையத்தள வசதிகள் உள்ளன. அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் 15.2 வீதமானவர்கள் இணையத்தள நிலையங்களில் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். கம்பகா மாவட்டத்தில் 16.7 வீத வீடுகள் இணையத் தள வசதிகளை கொண்டுள் ளன. அந்த மாவட்டத்தில் 18.9 வீதமானோர் இணையத்தள நிலையங்களில் அதனை பயன்படுத்துகின்றனர்.

இதனைத் தவிர வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணையத்தள நிலையங்கள் ஊடாக அதிகளவானோர் இணையத்தளங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

வவுனியாவில் 32.1 வீதமானோரும், யாழ்ப்பாணத்தில் 22.3 வீதமானோரும், மன்னாரில் 20.2 வீதமானோரும், கிளிநொச்சியில் 18 வீதமானோரும் மட்டக்களப்பில் 14.5 வீதமானோரும், திருகோணமலையில் 12.7 வீதமானோரும் இணையத்தள நிலையங்கள் ஊடாக இணையத்தளங்களை பார்வையிடுவதாக புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

# 30 ஆயிரம் தொன் கொப்பறாவை இறக்குமதி செய்யத் திட்டம்

தேங்காய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பிஸ்கட் உற்பத்தியாளர்களுக்கும் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வோருக்கும் உதவும் முகமாக அரசாங்கம் கொப்பறாவை இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளது.

அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் வரை நோய்த்தாக்கம் அற்றதாக உறுதிப்படுத்தப்பட்ட 30 ஆயிரம் தொன் கொப்பறா இறக்குமதி செய்யப்படும். இவற்றை இறக்குமதி செய்பவர்கள் செஸ் வரி, வற் வரி உட்பட துறைமுக விமான நிலைய கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

கமநல சேவைத்திணைக்களம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து தேவை ஏற்படும் போது கொப்பறாவை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கவுள்ளன.

கொப்பறா உற்பத்தியின் மூலம் உள்ளூர் கைத்தொழில் பாதிக்காத வகையில் இதனை செயற்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவில் அதிக தேங்காயை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றான இலங்கையில் இப்போது தேங்காய உற்பத்தி வீழ்ச்சி அடைந்து இருப்பதாகவும் தென்னந் தோட்டங்கள் பிரித்து விற்கப்படுவதே இதற்கான காரணம என்றும் கூறப்படுகிறது.

# 7 இலட்சம் மாணவர்களுக்கு பாதணி, மேலதிக சீருடை

(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்பிற்கிணங்க ஏழு இலட்சம் மாணவர்களுக்கு பாதணியும் மேலதிக சீருடைத் தொகுதியும் ஜனவரி மாதத்தில் வழங்கப்படும்.

இதற்கு 2500 மில்லியன் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

இதுவரை வெளிநாட்டிலிருந்து பாடசாலை சீருடை இறக்குமதி செய்யப்பட்டது. இவ்வருடத்திலிருந்து உள்ளூரில் அது உற்பத்தி செய்யப்படும்.

80 வீத சீருடைத் துணி உள்ளூரில் உற்பத்தியாகும். மிகுதியான 20 வீதம் துணியாக இறக்குமதி செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்படுகிறது.

உளளூார் துணிக்கைத் தொழிலாளர்களை முன்னேற்றும் மகிந்த சிந்தனை திட்டத்துக்கு ஏற்ப இது நடைமுறையாகும். பாதணிகள் உள்ளூர் தோலினால் உற்பத்தி செய்யப்படும். இதன மூலம் உள்ளூர் பாதணி உற்பத்தியாளர் நன்மை பெறுவரென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் குறைந்தது பிளாஸ்ரிக் பாவனை

(கொழும்பு)

இலங்கையில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தின் பாவனை இயன்றளவு குறைக்கப்பட்டுள்ளதாகமத்திய சுற்றாடல் அதிகாசபை தெரிவித்துள்ளது.

அதிகார சபை மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்துள்ளார். 70 சதவீதமான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்கள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லா வகையில் அழிக்கப்படுவதாகின்றது.

30 சதவீதமானவை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அயர்லாந்து அழகில் முதலிடம் அவலட்சணத்தில் மூன்றாமிடம்



அயர்லாந்துப் பெண்கள்தான் உலகிலேயே மிகவும் கவர்ச்சிகரமான பெண்கள் என்று இணையத்தளஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. பார்க்க மிகவும் அழகாக இருக்கும் பெண்களில் அயர்லாந்துப் பெண்களுக்குத்தான் முதலிடம் கிடைத்துள்ளதாக இந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

உலகின் 10 அழகான இனங்கள் என்று இந்த இணையத்தளம். வரிசைப் படுத்தியுள்ளது அதில் அயர்லாந்துப் பெண்களுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அதேசமயம், பார்ப்பதற்கு அவலட்சணமாக உள்ள ஆண்களில் அயர்லாந்து நாட்டு ஆண்களுக்கு 3ஆவது இடம் கிடைத்துள்ளது.கடந்த 2011 ஆம் ஆண்டு உலகிலேயே அவலட்சணமான ஆண்களில் முதலிடத்தில் இருந்தார்கள் அயர்லாந்து ஆண்கள்.

சுவீடன் நாட்டு ஆண்கள்தான் உலகிலேயே மிகவும் அழகான ஆண்களாவர் 2ஆவது இடத்தை பிரேசில் ஆண்களும், 3ஆவது இடத்தை அயர்லாந்து ஆண்களும் பெற்றுள்ளனர்.

# இந்திய மத்திய அரசு செயலற்று முடங்கிவிட்டது

## மோழ குற்றச்சாட்டு

இந்திய மத்திய அரசு செயலற்று முடங்கிவிட்டது என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி குற்றஞ் சாட்டியுள்ளார்.


பா.ஜ.க. சார்பில் ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நேற்று முன்தினம் பிரமாண்ட பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதற்காக நாடாளுமன்ற கட்டட வடிவில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய மோடி,மேலும் தெரிவிக்கையில் பழங்காலத்தில் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாது. அப்போது வானத்தில் இருந்து அவ்வப்போது அசரீரி ஒலிக்கும்.

காங்கிரஸில் இப்போது ஒரு அசரீரி ஒலிக்கிறது. அந்த குரலுக்குச் சொந்தக்காரர், ஊழல் குறித்து வெற்று வார்த்தைகளை அள்ளி வீசி வருகிறார். ஊழலைத் தடுக்க முதல்வர்கள் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று அவர் கூறுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஊழலில் மூழ்கித் திளைக்கும் அவர்களே ஊழலைக் குறித்து விமர்சிக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையென்றால் ஜார்க்கண்டில் ஊழல் விஸ்வரூபம் எடுத்திருப்பதற்கு யார் காரணம்? அதற்கு அவர்கள்தான் விளக்கம் அளிக்க வேண்டும்.



நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மத்திய அரசுதான் காரணம். மக்களுடனான தொடர்பை மத்திய அரசு முழுமையாக இழந்துவிட்டது. மக்கள் பிரிவினையை விரும்பவில்லை; வளர்ச்சியை விரும்புகிறார்கள். அரசியல் சந்தர்ப்பவாதங்களை விரும்பவில்லை, வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தேடுகிறார்கள். மதவாத விஷத்தை விரும்பவில்லை, பாதுகாப்பை விரும்புகிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியும் அதன் அரசுகளும் மக்களின் குரலுக்கு செவி சாய்க்க மறுக்கின்றன என்றார்.

# கொத்துக்குண்டுத் தாக்குதல்; சிரியாவில் 517பேர் பலி



சிரியாவில் கொத்துக் குண்டுத் தாக்குதலில் 517 பேர் பலியாகியுள்ளனர். சிரியாவின் பிரதான நகரங்களில் ஒன்றான அலெப்போ நகரில் மேற்கொள்ளப்பட்ட கொத்துக்குண்டுத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். கடந்த இரண்டு வார காலப்பகுதியில் மாத்திரம் 517 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 146 சிறுவர்களும் 47 பெண்களும் அடங்குவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் சிரிய இராணுவத்தினரால் அலெப்போ நகரை குறிவைத்து வானூர்தியின் மூலம் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# இரண்டுநாள் குண்டுவெடிப்பு ரஷ்யாவில் 27பேர் உயிரிழப்பு

ரஷ்யாவில் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 27பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ரஷ்யாவின் வோல்கோகிராட் நகரில் நேற்று பேருந்து ஒன்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர். இதே நகரில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்கும், இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இருப்பதாக ரஷ்ய புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, ரஷ்யாவின் தெற்குப் பகுதியான வோல்கோகிராட் நகரின் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்ட பெண் மனித வெடிகுண்டு தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். 40இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஒலிம்பிக் போட்டிக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாக தகவல் வெளியானதும், இதே நகரில் கடந்த ஒக்ரோபர் 21ஆம் திகதி பேருந்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும், வடக்கு காகசஸ் முழுவதும் இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தக் கோரி அங்கு அடிக்கடி தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# லெபனான் – இஸ்ரேல் முற்றுகிறது முறுகல்




தென் லெபனான் பகுதியை குறி வைத்து மூன்று எறிகணை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்தப்பிரதேசத்தில் இருந்து தமது பிரதேசத்திற்கு எறிகணை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதற்கு பதில் நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. எனினும் தம்மால் மேற்கொண்ட தாக்குதலில் லெபனானியர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என இஸ்ரேலிய இராணுவ வானொலி தெரிவித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதனை அடுத்து, இரண்டு லெபனான் பிரஜைகள சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்களை அடுத்தே இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, 2006ஆம் ஆண்டு 34 நாட்களாக இடம்பெற்ற யுத்தத்தை அடுத்து, இரு நாட்டு எல்லைப் பகுதியில் ஐக்கிய நாடுகளின் படையணியினர் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இந்த மோதலின் போது 1125இற்கும் மேற்பட்ட லெபனான் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 119 இஸ்ரேலிய துருப்பினரும் 45 பொதுமக்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குறைதீர்ப்பதற்கு புதிய முறை; அவகாசம் கோரும் டில்லி முதல்வர்



மக்களின் குறைகளைக் கேட்டு, அதற்கு தீர்வு காணும் புதிய அமைப்பை அடுத்த 10 நாள்களுக்குள் ஏற்படுத்த உள்ளதாகவும், அதற்கு பின்புதான் மனுக்களை பெறப்போவதாகவும் டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால், கடந்த சனிக்கிழமை பதவியேற்றார். அவரின் வீட்டின் முன்பு நேற்று முன்தினம் காலை ஏராளமான மக்கள் திரண்டனர். குறிப்பாக டில்லி போக்குவரத்துக் கழக ஊழியர்கள், மாநகராட்சி ஊழியர்கள், வால்மீகி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் குழுமியிருந்தனர்.

ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்க வேண்டும், அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக்க வேண்டும் என்று டில்லி போக்குவரத்துக் கழக ஊழியர்களும் மாநகராட்சி ஊழியர்களும் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களிடம் கெஜ்ரிவால் கூறியதாவது: நாங்கள் இப்போதுதான் பதவியேற்று இருக்கிறோம். புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திய பின்பே, மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறுவேன். இந்த அமைப்பை ஏற்படுத்த எனக்கு 10 நாட்கள் அவகாசம், கொடுங்கள். அதற்கு முன்பாக, மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அதை நிறைவேற்றித் தருவதாக தவறான வாக்குறுதிகளை அளிக்க நான் விரும்பவில்லை.

குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யும் வகையில் ஏற்படுத்தப்படவுள்ள அமைப்புக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். மக்களின் ஆதரவின்றி பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது" என்றார்.

# தொலைக்காட்சித் தொடரின் விபரீதம்; கணவன் கண்டித்ததால் மனைவி தீக்குளிப்பு



சமைக்காமல் தொலைக்காட்சிதொடர்பார்த்த மனைவியை கணவன் கண்டித்ததால் மனைவி தீக்குளித்த சம்பவம் தமிழகத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கையில்

கடலூர் நெய்வேலி அருகே உள்ள மந்தாரக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர் அருள் முருகன். மற்றும் சீதா. ஆகியோர் திருமணமாகி ஒரு வருடம் ஆகிறது. 21 வயதான சீதா, 2 நாட்களுக்கு முன்பு வீட்டில் சமையல் எதுவும் செய்யாமல் தொலைக்காட்சி தொடர் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது வீட்டுக்கு வந்த அருள் முருகன், மனைவி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்து கோபமடைந்து திட்டியுள்ளார்.இதனால் கோபமும், மன உளைச்சலும் அடைந்தார் சீதா. பின்னர் கணவர் வெளியே சென்ற நேரத்தில் மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்துள்ளார். உடல் கருகிய நிலையில் கதறித் துடித்த அவரை அயலார் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# வடகடல் நிறுவன செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் 2014 ஆம் வருடத்திற்கான செயற்பாடுகளின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடகடல் நிறுவனத்தை இலாபகரமான முறையில் முன்னெடுப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கடற்றொழிலாளர்கள் மத்தியில் வடகடல் நிறுவனத்தின் வலைகள் தொடர்பில் விழிப்புணர்வுகளை விரிவாக்குவது, கடற்றொழில் சார்ந்த முக்கிய இடங்களில் நிறுவனத்தின் விற்பனைக் கூடங்களை ஆரம்பிப்பது, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உற்பத்திகளை வழங்குவதை மேலும் பரவலாக்குவது போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

தரம் குறைந்த மீன்பிடி வலைகள் மலிவாகக் கிடைக்கக் கூடிய விற்பனைச் சந்தையில் வடகடல் நிறுவன வலைகளை தரம் கூடியதாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, பதில் செயலாளர் திருமதி. மங்கலிக்கா, அமைச்சரின் ஆலோசகர் திருமதி. ஜெகராஜசிங்கம், வடகடல் நிறுவனத் தலைவர்,, பொது முகாமையாளர் உட்பட ஏனைய அதிகாரிகள், அமைச்சு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பத்து விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா அபார வெற்றி



(டேர்பன்)

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டேர்பனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பத்து விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில், 2 விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்கள் எடுத்திருந்த இந்திய அணிக்கு புஜாரா (32), கோலி (11) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

எனினும் நேற்று ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே புஜாரா, கோலி இருவரும் மேற்கொண்டு ஓட்டம் எதுவும் எடுக்காமல் அடுத்தடுத்து பெவிலியன் திரும்பினர். இவர்களின் விக்கெட்டை ஸ்ரெயின் கைப்பற்றினார். ஒரு மணி நேரம் வரை நீடித்த ரோகித் சர்மா 25 ஓட்டங்களில் அவுட் ஆனார்.

நெருக்கடியான நேரத்தில் விக்கெட்டைக் காப்பாற்றும் முயற்சியில் நிதானமாக ஆடிய டோனி 15 ஓட்டத்தில் விக்கெட்டை இழந்தார். ரவீந்திர ஜடேஜா 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் உணவு இடைவேளையின் போது இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களை எடுத்திருந்தது. நெருக்கடியான சமயத்திலும் நிதானமாக ஆடிய அஜிங்கியா ரகானே அரைச் சதம் கடந்து தோல்வியைத் தவிர்க்க கடுமையாகப் போராடினார்.

ஆனால், மறுமுனையில் ஆடிய ஜாகீர்கான்(3), இஷாந்த் சர்மா(1) ஆகியோர் விரைவில் விக்கெட்டுக்களை இழந்ததால் ரகானேவுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும் கடைசி வரை போராடிய ரகானே 2 சிக்சர், 11 பவுண்டரிகளுடன் 96 ஓட்டங்களில் அவுட் ஆனார். இதனால் இந்தியா 223 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதையடுத்து 58 ஓட்டங்கள் என்ற எளிய வெற்றி இலக்குடன் களமிறங்கியது தென் ஆபிரிக்கா. தொடக்க வீரர்கள் ஸ்மித் (27), பீட்டர்சன் (31) ஆகிய இருவரும் இந்த இலக்கை விரை வில் எட்டினர். இதனால் 34 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் தென் ஆபிரிக்க அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரையும் 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரெயினும் தொடர்நாயகனாக வில்லியர்ஸூம் தெரிவாகினர்.

# காலாண்டுக்கான மருந்துகள் ஒரே தடவையில் இறக்குமதி

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்கு (4 மாதங்கள்) தேவையான அனைத்து மருந்து வகைகளும் ஒரே தடவையில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் அதிகமான வகை மருந்துகள் ஜனவரி மாதத்தில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இம்மருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

## மனித உரிமை...

ஆணையாளர். புதிய சட்டத்திருத்தத்தின்படி, மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைக்கின்ற பரிந்துரை ஒன்று நியாயமான காலத்துக்குள் நியாயமான வகையில் நிறைவேற்றப்படாவிட்டால், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கோ அல்லது மாகாண உயர்நீதிமன்றத்துக்கோ தங்களின் பரிந்துரையை ஒரு சான்றிதழ் போல சமர்ப்பித்து அதனை நீதிமன்ற உத்தரவாக வலுப்படுத்தும் ஏற்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டை சுமத்தமுடியும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை பலப்படுத்துமாறு ஐநா. மனித உரிமைகள் ஆணையர் நவிபிள்ளை கோரியிருந்தார்.

2013ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதிக்குள் சித்திரவதைகள் தொடர்பான 563 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் பெரும்பாலானவை பொலிஸாருக்கு எதிரானவை என்றும் ஆணையாளர் மஹநாமஹேவா கூறினார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஃபாஸ்ட் ட்ராக் அதாவது விரைவான விசாரணை நடைமுறையின் கீழ் தீர்வு வழங்கவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரம் கோரியுள்ளது.

சில நாடுகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுக்களுக்கு பகுதியளவு நீதிமன்ற அதிகாரங்கள் இருக்கின்ற போதிலும் அவ்வாறான அதிகாரங்களை இலங்கை ஆணைக்குழுவுக்கு வழங்க, 1996 இல் சட்டத்தைக் கொண்டுவந்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் முன்வரவில்லை என்றும் பிரதிபா மஹநாமஹேவா கூறினார்.

கடந்த காலங்களில் இலங்கையில் நடைபெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொமன்வெல்த் மனித உரிமைகள் துறையின் உதவியுடன் தேசிய மட்ட விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தமிழோசையிடம் கூறினார்.

ஓராண்டுக்கும் மேலாக நடந்த பேச்சுவார்த்தைக்ளின் விளைவாகத்தான் இந்த சட்டத்திருத்த வரைவைக் கொண்டுவந்திருக்கிறோம். ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல இது என்று அவர் பதிலளித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்திருந்த போது, மனித உரிமைகளை பாதுகாக்கும் கட்டமைப்பை மேலும் கட்டியெழுப்புமாறு எங்களிடம் கூறியிருந்தார் என்றும் மஹநாமஹேவா கூறினார்.

## நாளை முதல்...

நாட்டு மக்கள் மீது சுமத்தும் வகையில் பெற்றோல் விலை உயர்த்தப்படமாட்டாதென கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஈரானிடம் இருந்து மசகெண்ணெய் கொள்வனவு செய்யப்படுவதில்லை எனவும், ஓமான், அபுதாபியில் இருந்தே மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அந்த மசகெண்ணெய் 600 வகையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் பளைப் பகுதியில் எண்ணெய்க் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் அதன் மூலம் வடக்கிற்கு எரிபொருள் விநியோகம் இலகுவாக மேற்கொள்ள முடிவதுடன் போக்குவரத்து செலவும் குறையும் எனவும் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

# இலங்கை மாணவர்களுக்கு இந்திய புலமைப்பரிசில்கள்

## 20 இற்கு முன் விண்ணப்பிக்க அறிவிப்பு

புலமைப் பரிசில்கள் மூலம் இந்திப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைப் பெறுவதற்கான வாய்பை இலங்கை மாணவர்களுக்கு வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இப்புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பம் தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து தற்போது கோரப்பட்டுள்ளது. இநதிய அரசாங்கத்தின் ஐ.சீ.சீ.ஆர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 180 இலங்கை மாணவர்களுக்கு மருத்துவம் தவிர்ந்த ஏனைய கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

அந்தவகையில், புலமைப் பரிசில் மூலம் தெரிவு செய்யப்படுவோர் இந்தியாவின் பிரபல்ய பல்கலைக்கழகங்களில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களுக்கான பட்டப்படிப்புக் கற்கை நெறிகளைத் தொடர முடியும்.

இதற்கமைய, நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசிலினூடாக 100 புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இப்புலமைப் பரிசில் மூலம் பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், மானிடவியல் மற்றும் கலைத்துறைகளில் இளமாணி கற்கை நெறிகளை தொடர வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மௌலானா ஆஸாட் புலமைப் பரிசில் திட்டத்தினூடாக 50 புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம், பொறியியல், விஞ்ஞானம், பொருளியல், மானிடவியல், வர்த்தகம், கலைத்துறைகளில் முதுமாணி கற்கை நெறிகளை தொடர வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

அத்துடன், ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் 25 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதனூடாக தகவல் தொழில்நுட்ப கற்கைத் துறையில் இளமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.

இவை தவிர பொதுநலவாய புலமைப் பரிசில் திட்டத்தினூடாக ஐந்து மாணவர்களுக்கு மருத்துவம் தவிர்ந்த கற்கைத் துறைகளில் முதுமாணி மற்றும கலாநிதி பட்டப்படிப்புக்களை தொடர்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் உயர்கல்வ அமைச்சின் ஆலோசனையுடன் இந்தியாவின் பிரபல்யமான பல்கலைக்கழகங்களில் வழங்கப்படவுள்ள பட்டப்படிக்கான கற்கை நெறிகளுக்கு கற்கைக்கான கொடுப்பனவு, மாதாந்தக் கொடுப்பனவு, வதிவிடக் கொடுப்பனவு, பாடநூல்கள் கொள்வனவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு, சுகாதார பராமரிப்பு மற்றும் வருடாந்த சுற்றுலா என்பவற்றுக்கான மானியம் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமையுடைய மாணவர்கள் இலங்கையின் உயர்கல்வி அமைச்சினூடாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர். இப்புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப பத்திரத்தினை உயர் கல்வி அமைச்சின் இணையத் தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பங்களை 2014 ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கபட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனேடிய...

முல்லைத்தீவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா, கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்து நேற்று முதல் யாழ்ப்பாணத்தில் சந்திப்புக்களை மேற்கொண்டுவருகிறர். இதுவரை பல பொது அமைப்புக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர்களுக்கு...

முனாவர் கூறினார்.

நாளை முதலாம் திகதி தொடக்கம், காப்புறுதி மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கியின் இருப்பு குறித்த பரிசோதனைகள், கிராமிய மீன்பிடி அமைப்புகளினால் இறங்குதுறைகளில் மேற்கொள்ளப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

# எல்லைதாண்டும் மீனவர் விவகாரம்; வடக்கின் பிரதிநிதித்துவம் நிராகரிப்பு

## நியாயம் கேட்கிறார் சம்மேளனத் தலைவர்

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கான பேச்சுவார்த்தைக்கு வடமாகாண மீனவ பிரதிநிகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சம்மேளன கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய எமிலியாம்பிள்ளை, இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி சென்னையில் இந்திய மீனவ சங்கத்தின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தேசிய மீனவர் பேரவையின் பொதுச் செயலாளர் இளங்கோவன் தெரிவித்திருந்தார்.

இந்திய மீனவர்களினால் தென்பகுதி மீனவர்களை விட வட பகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அந்த வகையில், வடபகுதி மீனவர்கள் சார்ந்த பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தாவிட்டால் அப்பிரச்சினைகளுக்கான தீர்வு சரியான முறையில் கிடைக்காது.

இருப்பினும் இந்தப் பேச்சுவார்த்தைக்கு தென்பகுதி மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசத்தால் வடமாகாண மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், வடமாகாண மீனவர்களைத் தவிர்த்து பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

இலங்கை - இந்திய கடற்பரப்பில் எல்லைகள் கிடையாது. என இளங்கோவன் தெரிவித்திருந்தார். நான் கேட்கிறேன், அவ்வாறு எல்லைகள் இல்லாவிட்டால், ஏன் இரு நாட்டு மீனவர்களையும் கைதுசெய்ய வேண்டும்? கைது செய்யாமல் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கியிருக்கலாமே என்று அவர் மேலும் தெரிவித்தார். (25)

# சாரதியில்லாமல் பறந்தது ரயி தவறு யார் தலையில்

## விசாரணை அறிக்கை வெளிவந்தது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கல்கிஸ்ஸை வரை ஓட்டுநர் இல்லாது ரயில் என்ஜின் ஒன்று பயணித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த அமைக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை போக்குவரத்து அமைச்சரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

விசாரணை அறிக்கையின்படி ரயில் புற இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோரின் தவறே ரயில் தனியே பயணித்தமைக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

டிசம்பர் 5 ஆம் திகதி காலை 1.45 மணியளவில் ரயில் என்ஜின் கல்கிஸ்ஸை சென்று கொண்டிருந்த மறித்து நிறுத்தப்பட்டதாக ம ரயில் கட்டுப்பாட்டு நி தெரிவித்தது.

மணிக்கு 5 கிலோமீ வேகத்தில் குறித்த ரயில் ஜின் பயணம் செய்துள்ளதாக எனினும் இதனால் எவருக் எதுவித சேதமும் ஏற்படவில் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு; மொழிப்புறக்கணிப்புக்கு இடமில்லை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நீர்ப்பாசனத் திணைக்கள ஆய்வுகூடப் பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கதடிங்கள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயத்தில் மொழியுரிமை மீறப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை அடுத்து பரீட்சார்த்திகளுக்கு தமிழ் மொழியில் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பிதழ் கதடிங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டு எதிர்வரும் தை மாதம் 10,11 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து பத்திரிகையில் வெளிவந்த செய்தியை ஆதாரமாகக் கொண்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சம்பந்தப்பட்ட திணைக்களத்துட தொடர்புகொண்டு தெரியப்ப தியதையடுத்தே இந்தப் சைக்கான அழைப்பிதழ் கத கள் தமிழிலும் பரீட்சார்த் ளுக்கு அனுப்பிவைக்கப்பட் பதாக தெரிவிக்கப்பட்டுள்ள

ஏற்கனவே குறித்த நேர்மு பரீட்சைக்கு தனிச் சிங்களத் கதடிங்கள் அனுப்பிவைக்கப் ருந்தது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்ப்பா பணிப்பாளர் அலுவலகத்தி நீர்ப்பாசனத் திணைக்களத் நீர்ப்பாசன பணிப்பாளர் அ வலக நூலகம் ஆகியவற் நேர்முகப் பரீட்சை நடைபெற ளது. (

# குடிவரவு குடியகல்வு திணைக்கள அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமும் அவசர தொலைபேசி சேவையொன்றினை அறிமுகம் செய்துள்ளது.

1962 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்புகொள்ள முடியும் என தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த தொலைபேசி சேவையின் ஊடாக கடவுச்சீட்டு உள்ளிட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவைகள் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும்.

# சுயதொழில் ஊக்குவிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க புலோலி வல்லிபுர குறிச்சிப் பகுதியில் கருப்பட்டி (பனங்கட்டி) செய்வதற்கு 30 பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாப்படி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது. இதற்கான விசேட அனுமதியை அரசு வழங்கியுள்ளது. (109)

# பழ வியாபாரிகளுக்கு பாதிப்பு; நடவடிக்கை எப்போது?

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்தையில் பழ வியாபரம் செய்துவரும் வியாபாரிகள் அண்மைக்காலமாக தாங்கள் பெரும் பண இழப்பீட்டை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

சந்தையின் மாடிக் கட்டடத்தில் பழ வியாபாரத்துக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் தாங்கள் வியாபாரம் செய்துவரும் பழங்களை கீழ்த்தரையில் வைத்து விற்பனை செய்துவிட்டு போவதனால் தங்கள் பழங்கள் விற்பனையாகாமல் தேங்கிப் பழுதடைந்து விடுவதால் தாங்கள் பெருமளவு இழப்பை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கீழ்த்தரையில் எவரும் பழங்களை விற்பதற்கு அனுமதிக்கக் கூடாது என அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தரையில் அவர்களை அனுமதிப்பதனால் மேல் மாடியிலிருந்து தங்களையும் இடம்மாற்றி கீழ்த்தளத்திற்கு பழ வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கும்படி வியாபாரிகள் கேட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலிச் சந்தையை நிர்வகித்து வருகிறது. வருடாவருடம் பெருந்தொகைப் பணத்துக்கு இதனை தனியாருக்கு குத்தகைக்கு வழங்குகிறது.

பல தடவைகள் தாங்கள் முறைப்பாடு செய்தபோதும் இவ்விடயம் குறித்து இதுவரைக்கும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என இச்சந்தையின் பழ வியாபாரிகள் கவலை வெளிப்படுத்தியுள்ளனர். (137)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக் புதிய உறுப்பினர் நியமனம்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் தியாகராஜாவின் மறைவையடுத்து அவரின் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் கந்தன் இராசதுரை என்பவர் பிரதேசசபை உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச்சார்ந்த வயிரன் தியாகராஜா ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டு பச்சிலைப் பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களில் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் கடந்த 16.08. 2013 அன்று அவர் விபத்தில் மரணமானதையடுத்து அவரின் வெ றிடத்தை நிவர்த்தி செய்யும் யில் உள்ளூராட்சி அதிகாரச களின் தேர்தல் கட்டளைச்ச தின் 65அ(2)எனும் பிரிவி அவர் சேர்ந்திருந்த அங்கீச பட்ட அரசியல் கட்சியா கியமக்கள் சுதந்திரக் கூட் பின் செயலாளரினால் அதே சார்பாக பிரதேசசபைத் தே லில் போட்டியிட்ட ஈழ மக் ஜனநாயக் கட்சியைச் சார் கந்தன் இராசதுரை என்பவர் மிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடி தினை ஈ.பி.டி.பி.யின் நாடா மன்ற உறுப்பினரும் குழுக்கள் பிரதித்தலைவருமான மு.சந் குமார் நேற்று வழங்கினார்.

# அரசுடன் முட்டி மோத நான் தயாராக இல்லை

## இணங்கிச் சென்று மக்கள் பணி செய்வதே இலக்கு



அரசாங்கத்துடன் சார்ந்து போவதாக தன் மீது குற்றம் சுமத்தும் நபர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பதாகவும் அந்த பண்டிதர்கள் 2002 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் மோதி அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை வீழ்த்திக் கொண்டதாக கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸ்ஸாமில் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இதனை கூறினார்.

நானும் அரசாங்கத்துடன் மோதலுக்கு சென்று நகர சபையையும் வீழ்த்தி கொள்ள வேண்டுமா என நான் இந்த பண்டிதர்களை கேட்கிறேன். 2002 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அமைச் சரவையில் இருந்த பண்டிதர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் மோதலுக்கு சென்றனர்.

இறுதியில் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் கவிழ்ந்து போனது. அந்த பண்டிதர்கள்தான் இன்று என் மீது குற்றம் சுமத்துகின்றனர். எனினும் நான் ஐக்கிய தேசியக் கட்சியை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டேன்.

நான் அரசாங்கத்துடன் மோதலுக்கு போகாமல், அரசாங்கத்தின் வளங்களை பெற்று நகர மக்களின் முன்னேற்றத்திற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறேன். அரசாங்கத்திடம் உதவிகளைப் பெற்றாலும் நான் ஐ.தே. கட்சியின் மாநகர மேயர் என மேலும் தெரிவித்தார்.

# ரயிலுடன் மோதியது வான்

(கொழும்பு)

ஹிக்கடுவ புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் வான் ஒன்று புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய வானை, சுமார் 200 மீற்றர் வரை அந்த புகையிரதம் இழுத்துச் சென்றதாக ஹிக்கடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் போது வானின் சாரதி மாத்திரமே அதில் இருந்ததாகவும் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 'மில்கோ' ஊழியர் போராட்டத்துக் நேற்றுடன் முற்றுப்புள்ளி

(கொழும்பு)

"மில்கோ" ஊழியர்கள் கடந்த 9 ஆம் திகதி முதல் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்த போராட்டம் நேற்று கைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் இலங்கை சுதந்திர சேவைகள் சங்கத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் பத்மசிறி சில்வா தெரிவித்தார்.

தொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்ட பிரச்சினை விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்று இந்தப் பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி உறுதியளித்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எமது சங்கத்தின் சார்பி வண. முருத்தெட்டுவே ஆன தேரர் பங்கேற்றார். நாம் துள்ள கோரிக்கைகளில் மூ கோரிக்கைகள் மத்தியசபை பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கை தொடர்பாக ஒரு மாதத்தி தீர்வு காணப்படும் என உறு ளிக்கப்பட்டுள்ளதாக பத் தெரிவித்தார்.

மில்கோ நிறுவனத்தின் மைத்துவம் அகற்றப்பட வே டும் மற்றும் போனஸ் கொ பனவு வழங்கப்படவேண் உள்ளிட்ட கோரிக்கைகளை மு வைத்தே ஊழியர் வேலைநி த்த போராட்டத்தில் குதித்தி தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.